**Tamil Heritage Foundation**

தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials

e-Book series

an international NGO initiative to digitize old Tamil books and palm leaf manuscripts

visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை

தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை

# நாடார் குல மித்திரன்.

அருப்புக்கோட்டை நாடார் கல்விப் பிரசங்க
சபையினின்று வெளிவரும்,

ஒரு மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்." (திருக்குறள்)

வயது 1. } 1920௵ ஜூன்௴ ரௌத்திரி௵ வைகாசி௴ { மாதம் 10.

| எ. | வியாச விஷயங்கள். | பக்கம். |
|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம் ... ... | 289 |
| 2. | சென்னை நாடார்களும் ஐக்கிய சங்கமும் ... | 290 |
| 3. | நமது ரகசியம் ... ... | 293 |
| 4. | கடிதங்கள் ... ... | 295 |
| 5. | என் சரிதை ... ... | 302 |
| 6. | சங்கரர் வெண்பா ... ... | 304 |
| 7. | ஒரு மாணவனின் குறிப்புகள் ... | 305 |
| 8. | சங்க விசேஷங்கள் ... ... | 307 |
| 9. | வருண நிலையின் வாய்ப்போக்கு ... | 313 |
| 10. | விடுகதை வினாவிடை ... ... | 314 |
| 11. | கீழ்கால விஷயங்கள் ... ... | 316 |
| 12. | மிஸ்டர் அஸரியா நாடார் ... ... | 319 |

ஸ்ரீ கு. ஆ. முத்துநாடார் பத்திராதிபர், பத்திராசிரியர்
Tamil Heritage Foundation International - Digital Library EBook collection
நவரத்னம் பிரஸ், மதுரை.

## சந்தாதாரர் கவனிக்கவேண்டிய விதிகள்.

1. பதில் தெரிய விரும்புவோர் ரிப்ளை எழுதவேண்டும்.

2. சந்தாதாரர்கள் தமது நெம்பரைக் குறித்தனுப்புவதுடன் முழு விலாசத்தையும் விவரமாகத் தெரிவிக்க வேண்டும்.

3. இராஜ விரோதம், புறமத தூஷணை முதலிய அனுவசியமான கடிதங்களை அங்கீகரிக்க முடியாது.

4. கடித விஷயதான மெழுதவோர் பொதுவான வியாசமாகவே எழுத வேண்டும். அனுவசயமான வியாசங்களை பதிப்பிக்க முடியாது.

5. சந்தாதாரராய்ச் சேரவிரும்புவோர் முன்பணமேனும் வி.பி விலேனும் செலுத்தலாம்.

6. எந்தமாதத்தில் சந்தாதாரராய்ச்சேர்ந்தாலும் முந்திய பத்திரிகைகளையும் சேர்த்தனுப்பப்படும்.

7. படிக்கத் தெரியாமலும், வித்தியாசமான பதப்பிரயோகமும், கடிதமிரண்டு பக்கமும் எழுதிவரும் வியாசங்களை கவனிக்க முடியாது.

### சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய விடங்களுக்கு தபாற்கூலி யுள்பட வருட மொன்றுக்கு ரூபா 1 8 0.

சிங்கப்பூர், நெட்டால் முதலிய ஜலப்பிரதேசங்கட்கு தபாற்கூலி உள்பட வருடமொன்றுக்கு ரூபா 2 0 0.

ஆறுமாத சந்தா கிடையாது.

---

### விளம்பர விகிதம்.

| | | | | |
|---|---|---|---|---|
| மாதம் ஒன்றுக்கு 1-பக்கத்திற்கு ரூபா | 3 | 0 | 0 |
| ,, ,, ½-பக்கத்திற்கு ,, | 2 | 0 | 0 |

நீடித்தகால விளம்பரங் கொடுப்போர்களுக்கு சந்தாற்பானு சாசமாய் நியமான சார்சுக்கு விடப்படும் ரிப்ளை எழுதி பதில் தெரியலாம்.

### போஷகர் விவரம்.

மொத்தமாக ரூபா 50 கொடுப்பவர்கள் போஷகர்.
மொத்தமாக ரூபா 25 கொடுப்பவர்கள் ஜீவியசந்தாதாரர்.

இப்படிக்கு,
சு. ஆ. முத்து நாடார்,
பத்திராதிபர்.
நாடார் குல மித்திரன் ஆபீஸ்,
அருப்புக்கோட்டை

உ

வேலுமயிலுந் துணை.

# நாடார் குல மித்திரன்.

அருப்புக்கோட்டை நாடார் கல்விப்பிரசங்க சபையினின்று வெளிவரும்

## ஒரு மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

வயது 1. } 1920ஆம் ஜூன்மீ ரௌத்திரிஆ வைகாசிமீ { மாதம் 10

### கடவுள் வணக்கம்.

காரிட்ட வாணவச் கருவறையி லறிவற்ற
சண்ணிலாக் குழவி யைப்போற்
கட்டுண்டி ருந்தவெமை வெளியில்விட் டல்லாங்
காப்பிட் டதற்கி சைந்தப்
பேரிட்டு மெய்யென்று பேசுபாழ் பொய்யுடல்
பெலக்கவிளை யமுத மூட்டிப்
பெரியபுவ னத்திடைப் போக்குவர வுறுகின்ற
பெரியவிளை யாட்ட மைத்திட்
டேரிட்ட தன்சுருதி மொழிதப்பி னமனைவிட்
டிடருறவு றுக்கி யிடர்தீர்த்
திரவுபக லில்லாத பேரின்ப வீட்டினி
லிசைந்துதயில் கொண்மி னென்று
சீரிட்ட வுலகன்னை வடிவான வெங்கையே
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரிவி ளங்கவரு தக்ஷிண மூர்த்தியே
சின்மயா னந்த குருவே.

---

# நாடார்குல மித்திரன்.

## ரௌத்திரிஸ்ரீ வைகாசிமீ

### சென்னை நாடார்களும் ஐக்கிய சங்கமும்.

சிவராஜதானி என்னும் நமது பாண்டிய நாட்டின் பற்பலப்பகுதிகளிலும் கனதன சுசீலராய் வாழும் நங்குல நாடார்களி லனேகர் சென்னை ராஜதானியிற் குடியேறி சுமார் நூறு வருடங்களுக்கு மேலிருக்கலாம். திரண்ட செல்வாக்கும் சிறந்த வியாபாரப்பெருக்குமுடையோராய் ஐந்நூறு வீட்டுக் கதிகமாகவே அங்கு வசிக்கின்றனர். இவர்களிற் பெரும்பாலார் தமது நிலம்புலன்களை தென்தேசமாகிய தத்தம் கிராமங்களில் விருத்தி செய்துகொண்டும் சென்னையில் வியாபாரஞ் செய்து கொண்டும், பெண் கொடுக்கல் வாங்கல் முதலியதும் இங்கும் அங்குமாகவே வைத்திருக்கின்றனர். முக்கால் பாகத்துக்கதிகம் தக்ஷிணமாற நாடார்களே சென்னையிற் குடிபுகுந்திருக்கின்றனர். இருந்தும் இவர்கள் அங்கு குடியேறி வசிக்கும் குலப்பான்மை இப்பக்கம் அநேகருக்கு நன்கு விளங்கா நின்றமைக்குக் காரணம், அவர்களின் சுதேசப் பழக்க வழக்கமான மகமை ஸ்தாபித்து அதன் மூலமாக ஏற்படும் பொதுக்காரியங்களைச் சீர்தூக்கி நடத்தாமையாம். பாண்டியன் வமிசத்திற் பிறந்து பாண்டிய நாட்டில் வளர்ந்த நாடார்கள் தங்குலாசார தர்ம பாஷையை மறந்து, இதுகாலப் பரியந்தம் சென்னையில் வசித்து வந்ததை நினைக்க நமக்கன்றி நங்குல மக்களனைவருக்கும் மனவருத்தத்தைக் கொடுக்குமென்பதை இங்கெழுத வேண்டுவதில்லை.

தற்காலம் நாலுதிசையும் பரவி நான் முந்தினேன் நாங்கள் முந்தினோம் என்றோடும் நாகரீகப் பந்தய ஓட்டத்தைக்கண்ட சென்னை நாடார்கள், இதுகாலும் தாங்கள் ஸ்நேகித்திருந்த கனம் கும்பகர்ண ராஜனை விட்டுவிலகி நித்திரை மயக்கந்தெளிந்து சென்னை பாண்டிய



குல க்ஷத்திரிய நாடார்கள் ஐக்கிய சங்கம் என்னுந் தங்கக் கப்பலை ஸ்தாபித்து, மகமை என்ற சுங்கானைப் பிடித்து முன்னேற்றப் பந்தயக் கடலைத்தாண்டும் முயற்சி எடுத்துக் கொண்டார்கள். சங்கம் ஸ்தாபித்த சொற்பகாலத்தில் ஆண் பெண் பாடசாலை நியமித்தார்கள். அதற்கென்று சொந்தக் கட்டிடமும் கட்டி முடித்தார்கள். இடையில் ஏதோ ஒரு சிறிய காரணத்தை முன்னிட்டு ஜனக்கலக்கமும் தலைவர்கள் மனக்குழப்பமும் நேர்ந்தது. இதன் பலனை சங்கத்தில் கக்ஷிப்பிரதிகக்ஷியும் ஏற்பட்டுவிட்டது. மகமை வசூலும் நின்றுவிட்டது. ஆரம்பித்த ஸ்கூலும் ஆடத் தொடங்கிவிட்டது. சமீபத்தில் நாம் சென்னை சென்றதும் அங்குள்ள தலைவர்களை ஒன்று கூட்டியதும் நம் மித்திரனில் வெளிவந்ததை நேயர்கள் அறிந்திருக்கலாம்.

விற்பன விவேகமும் நற்குணநற்செய்கையும் நன்கமையப்பெற்ற நாட்டாண்மை ஸ்ரீமான் முத்துசாமி நாடார் அவர்கள் மேற்சொன்ன விகற்பங்களை விலக்கி சித்திரை மாதமுதல் மகமை வசூலை நடத்தி ஸ்கூலைத் திறந்து விடுவதாக நமக்களித்த வாக்குறுதியை மறந்து வைகாசி பிறந்தும் வாளா விருப்பதற்கு விசனிக்கின்றோம். ஐந்நூறு வீட்டுச் சனங்களுக்கும் (அரசன்போன்ற) அதிகாரப் பட்டம்பெற்ற இவர் இங்ஙன மிருப்பதும் விந்தைதான்! அரசனெவ்வழியோ அவ்வழியே அமைச்சரேனையோர் என்றபடி சனங்களும் இனிமேல் இவரது பிடிவாதத்தைப் பிடிப்பார்களாகில் அதைவிடக் கண்ணியக்குறைவு வேறென்ன விருக்கிறது? ராஜவமிசத்திற் பிறந்து ராஜதானியிற் குடியேறி வசிக்கும் நாடார்கள் இவ்வித மிருக்கின் ஏனையோர்க் கெவ்விதமாம்?

ஆருக்குவந்த விருந்தோவென சென்னை நாடார்கள் தத்தம் மனப்போக்கில் இருப்பதினால்தான், நமது நாடார் மகாஜன சங்கம் ஸ்தாபித்து இதுகால மாகியும் மெம்பர்களாய்ச் சேர்ந்த சென்னை வாசிகள் இரண்டொருவருக்கு மேலில்லை. உயர்தரப்படிப்பில் வாசித்து உத்தியோகத்துக்கு முன்வந்தப் பிள்ளைகளுமிலர். நாட்டுப் புறத்திநின்று ராஜதானியிற் குடியேறி என்னபலன் என்பதை இன்னமுங் கவனிப்பாரிலர்.

நன்னயமார்ந்த சென்னையில்வாழும் நாடார்களே! தற்கால வியல்பை யுன்னிப்பாருங்கள். இன்னமும் நீங்கள் முன்காலப்படி பின்காலிருக்குமென்றெண்ணி ஒற்றுமை விட்டு வேற்றுமை காட்டி எடுத்த

வேலைக்கு இடையூறு தேடிநிற்பது நன்மையல்ல. நாகரீகம் என்னும் மோட்டார் வண்டியில் நவீனதம் என்னும் மனிதர்களேறி பந்தயம் என்னும் சவாரிசெய்து (எங்கள் கக்ஷிக்கு உரிமை உங்கள் கக்ஷிக்கு வெறுமை) என்று கண்டா மணியடிக்குஞ் சப்தமானது உங்கள் காதிற்புகவில்லையா? இது சமயம் ராஜதானியில் வசிக்கும் நீங்களல்லவா முன்னின்று பத்துலக்ஷம் ஜனத்தொகைகொண்ட நமது நாடார்குல மரபிற்கு வேண்டியமுன்னேற்ற முயற்சிசெய்யவேண்டும். காலப்போக்கைக் கவனியாமல் குலநலத்தைக்கைவிட்டு கோபத்தைக்காட்டி மனோவேகஞ் சாதிப்பதில் லாபமில்லை. தலைநகரமாகிய சென்னையில் வசிக்கும் தலைவர்கள் பின்னிட்டு நின்றால், குலநல மற்றுப்போம். இதோ சென்னை மாகாணப் புதுச் சட்டசபை என்ற பிரசண்ட மாருதக் காற்றானது வீசியடிக்கின்றது. தேச ஜனங்கள் முழுதும் இக் காற்றில் அகப்பட்டுச் சுழல்கின்றனர். இடையில் நாமும் ஓர் வகுப்பினராக எதிர்த்து நிற்கின்றோம். இந்த சமயம் அந்தக் காற்றின் வேகத்திற்கு தக்க பலங்கொண்டு நிற்கவேண்டும். இலதேல் சுழன்று விடுவோம்.

ஆகவே இனியேனும் சென்னை ஐக்கிய சங்கத்தின் மகமை வருவையும் ஸ்கூலையும் ஒழுங்காக நடத்தி ஆரியக் கூத்தாடினுங் காரியத்திற் கண் என்றபடி, நன்மைசெய்யப் புகுந்தால் தீமைதொடரும். அதைச் சகித்து மேற்செல்ல நன்மையே கிடைக்கும். என்பதை எண்ணி கக்ஷிப் பிரதிகக்ஷியின் விகற்பங்களை விலக்கி நங்குலச் சிறுவர் சிறுமிகளின், கல்வி, கைத்தொழில், அபிவிருத்தியை நாடி, என்றுங் குன்றா வளத்துடன் வாழுங் கண்ணியத்தை நிலை நிறுத்துவதுடன், சமீபத்தில் தூத்துக்குடியில் நடக்கும் நமது மகாஜன சங்கம் 6-வது கான்பரென்ஸுக்கும், ஐக்கிய சங்கத் தலைவர்கள் விஜயஞ்செய்து, அங்கு நடக்கும் தீர்மானப்படி, சட்டசபை எலக்ஷன் ஓட்டுகளை நங்குலப் பிரதிநிதிகளுக்கே கொடுத்து, அதற்குவேண்டிய முயற்சிக்கும் சென்னை நாடார்குல தனவான்கள் முன்னிற்கக் கோருகின்றோம்.

பத்திராதிபர்.

---



# நமது ரகசியம்.

என்ன ரகசியம். பரமரகசியமா? அல்லது பகிரங்க ரகசியமா? இல்லை சிதம்பர ரகசியமா? என்று நம் மித்திராபிமானிகள் உற்றுப் பார்த்து சற்று யோசிக்கக்கூடும். அந்த ரகசியங்களை இக்கக்காலத்தில் ...மேடுத்துப் பேசுவதில் ... பேசவரினுங் கேட்போர். ஆகவே ரகசியமொரு ரகசியம் நீங்கள் கேட்கவேண்டுவ தவசியம். என்று மென்மேலும் வற்புறுத்தி நமது ரகசியக் கதையை விசசிகமாகப் படித்து முடிக்கின்றேன்.

நிலவுலாவிய நம் பிந்தியக்காயின் செந்தமிழ் மணக்கும் சுந்தரப் பாண்டிய தேசராஜ வம்சாதிபதிகளான நமது நாடார் மகாஜன சங்கம் ஸ்தாபித்து 6-வது கான்பரென்ஸும் தூத்துக்குடியில் நடைபெறுங் காலம் சமீபித்தது. இக்கான்பரென்ஸில் அநேகவிஷயங்களை ஆழ்வுக் கெடுத்துக் கொண்டுவந்து அனுஷ்டானத்துக்கு விடும் முயற்சியில் நம்பினமாபிமானிகளின் ... கங்கணதாரணஞ் செய்து நிற்கின்றனர். செவ்விதமே நடைபெற ஆண்டவன் கிருபையை வேண்டி நிற்கின்றேன். ஆயினும் இதற்கு முன்னடந்த கான்பரன்ஸ்களில் பேசி முடித்த விஷயங்கள் எவ்வளவுதூரம் அனுஷ்டானத்திற்கு வந்திருக்கிறதென்பது ஊர்ஜிதமாகச் சொல்வதற்கு சந்தேகம் என்ற நிலையானது நிற்கின்றது.

ஏன்? மகாஜன சங்கம் ஸ்தாபித்த இதுநாளில் பேசிய தீர்மானப்படி நடந்து வந்திருக்குமாகில் இதற்குள் நமது ஜனசமூகம் எவ்வளவு நன்மைக்கு வந்திருக்கலாம்! ஐயோ! கூடுவதும் பேசுவதுமாகவே காலங் கடக்கிறதே தவிர காரியமாகுஞ் சீரியமில்லை. தலைவர்கள் மனச்சமூஞ் சற்றுத்தளர்ந்து நிற்கிறது. இலதேல் மகாஜன சங்கத்தை ஸ்தாபித்த மஹானுபாவர், ராவ்பகதூர் த இரத்தினசாமி நாடார் அவர்களின் உருவச்சிலை ஸ்தாபிக்க வேண்டிய பேச்சு வார்த்தைகள் நடந்தும், நாலாவது கான்பரென்ஸில் இதுவிஷயமாக ஈாமோர் தீர்மானம் பிரசுரம் வெளிப்படுத்தியும், அவ்விஷயம் ஆனபாடில்லை. பேச்சே பேச்சாகிவிட்டது. என்னவிக்கை! வாடாத செல்வம்வாய்ந்த நாடார் குல மேதாவிகளுக் கிதுவோர் பெருங்காரியமா? உற்று நினைப்பார்களானால் சற்று நேரத்தில் உருவச்சிலை ஸ்தாபன மாகிவிடுமே! இனியாவது மேற்கண்ட ரகசியத்தைக் கவனித்து ஷை யாரின் உருவச்சிலையை ஸ்தாபித்து ஊர்ஜிதப்படுத்த யோசிப்பார்களா?

இதுநிற்க நமது ஜனசமூகம் முன்னுக்கு வரவேண்டும், கட்டாயப் படிப்புவேண்டும். விதவா விவாகம்வேண்டும் பால்யவிவாகத்தை நிறுத்தவேண்டும். என்று பலத்த சப்தமிடுகின்றனர். இந்த சப்த ராசியத்தை இதுநாளுங் கவனித்து யேற்ற முயற்சி செய்ததுண்டா? என்னே நமது முன்னேற்ற முயற்சி!! எல்லாம் என்மயம் என்று எங்கு பார்த்தாலும் நவீனகம் நாகரீகம் என்னும் சக்கரமானது சுழன்றுவரும் இக்காலத்திலும் நமது ஜனசமூக வனிதாமணி (பெண்)களை காண்டரென்வில் இடங்கொடுத்து, தற்கால வியல்பைக்காட்டிவித்தை புத்தியிற் சித்திபெறு திருக்கச் செய்கின்றேமே? ஏன்? இக்காரியஞ்செய்யத் தகாதோ? முக்காடிட்டு மூலையில் நிற்கும்.......... ஸ்திரிகளும் பகிரங்க சங்கங்களில் இடம் பெற்றமர்வதும், அவரவர்கள் கல்விக்கேற்றபடி உபன்யாசிப்பதும், அவர்களே சங்கங்கள் ஸ்தாபித்திருப்பதும் நாமறியாததல்லவே? ஏனைய இந்திய சகோதரிகளின் சங்கங்கள் அங்கங்கே நியமனமாகி அதன்மூலம் அவர்கள் தக்க சாதனமடைந்து வருவதை நம்மவர்கள் கவனிக்கவில்லையா? அன்றி நம்மினப் பெண்களுக்கு இன்னும் நல்லகாலம் பிறக்கவில்லையா? இந்த ரகசியத்தை நமது சங்கம் இம்முறையேனும் கவனிக்குமா?

நமது சங்கம் என்ற தங்கத்தின் மணமறியாத கிராமவாசிகள் இந்தப் புதின காலத்தும் மவினமுற் றிருக்கின்றனரோ, இத்தகைய புராதனர்கள் வாழுங் கிராமங்களில் (பிரிட்டிஷ் ஆக்ஷிக்கொடியின் பெருமையைக் கவனியாது) சில புலித்தோற் பூனைகள், நீங்களப்படி, நாங்களிப்படி, என்று பயமுறுத்தித் திரிகின்றதே, இந்த கிராமவாசிகளுக்கு நன்மதிபுகட்டி நாகரீகத்தைக்காட்டி, சங்க மகுடத்தைச் சூட்டி, அங்கங்கே பள்ளிக்கூடங்களை நிலைநாட்டி, புலித்தோல் பூனைகள் பயத்தை யோட்டிவிடுவது, எக்காலம்? தற்காலங் காணுமோ? ஏராளமான தனசம்பத்துடைய விவசாயிகள் கிராமங்களில் வசிக்கின்றனர். அங்கவர்கள் நிலைமை நாளதும் விசனிக்கக் கூடியதே ஏனெனில், படித்துணர்ந்த பாக்கியவான்கள் அங்கிலர். அவர்கள் தன்னூரைவிட்டு அயலூர்முகம் பார்த்தறியாதவர்கள். இவர்கள் நன்னிலைமையடைந்தாலன்றோ நமது ஜனசமூகம் முன்னிலைமைக்கு வரும். இதற்கென்ன யோசனை என்றன்னி கிராமங்களுட் புகுந்து அங்குள்ள நங்குல மக்களின் சங்கேதத்தை விலக்கி சங்கத்தேனைக் கொடுத்து நிலைநிறுத்த லெப்பவோ? முன் சொல்லிவந்த எந்த விஷயங்களைப் பிந்திச் செய்தாலும் இந்த வேலையை முந்திச் செய்யவேண்டும் என்று நாமிங்கு சொல்லவந்த இம்மகா ரகசியத்தை நமது மகாஜன சங்கம் இம்முறையேனுந் தம்முறையென்று செம்மையோடு கவனித்து நன்மைதரக் கோருகிறேன்.

ச. அ. சங்கரலிங்க நாடார்.

---



# கடிதங்கள்.

நம்மவர்களாகிய நாடார்களே
நன்றென்பதை யன்றே செய்யுங்கள்.

நம்மவர்களின் க்ஷேமத்துக்காக மகமை யென்னும் உலவாக்கிழியை எம்பெருமான் நம்முன்னோர்களுக்கு அருளிச் செய்தனர். அம் மகமையின் முக்கிய கருத்து நம்மவர்களிருப்பதற்கு வசதியான இடங்களை யமைத்தல் நம்மவர்களை பலர்களின் துன்பத்தினின்றும் விலக்கி காப்பாற்றிக் கொள்ளல், குல மேன்மைக்கான காரியங்களைச் செய்தல், இனபோசனஞ் செய்வித்தல் முதலியவைகளேயாம். இது தொன்றுதொட்டு நடந்து வருவதில் மகமைப்பணம் மிகுதியாக வந்தபடியால் தேவாலய கைங்கரியங்களுக்கு உதவிவந்திருக்கிறோம். ஆனால் இங்கிலீஷ் இராச்சிய பாரம் எங்கும்பரவி இந்தியாவையும் ஆண்டுவர தலைப்பட்ட காலமுதல் அநேகர் படித்து உயர்தர உத்தியோகங்களோ, பலதேச வியாபாரங்களோ கைத்தொழிற்களோ செய்து உன்னத நிலைமை யடைந்திருக்கிறார்கள். அடைகிறார்கள். நம்மவர்களோ குலமேன்மைக்காக அமைத்த மகமைப் பணத்தை தற்காலத்துக்கு வேண்டியபடிப்பை விருத்திசெய்து நம்மவர்களை முன்னுக்குக் கொண்டு வருவதற்கு செலவு செய்யாமல் அன்னியர்களுக்கே பலவிதத்திலும் செலவு செய்கிறார்கள். அன்னியர்களுக்கே உதவிபுரியும் இவர்கள் நம் பள்ளிக்கூடத்தில் அன்னியர்களைச் சேர்த்தால் புகார்செய்கிறார்கள். யோசித்துப் பாருங்கள் மகமைப் பணத்தைக்கொண்டு கோவில்கட்டி கும்பாபிஷேகம் செய்து நித்தியபூசை பிரமோர்ச்சவ முதலியதுகளை செய்வதில் நம்மவர்களுக்கு ஒரு பிரயோஜனமாவது உண்டா?

கல்லடிப்பவர் கம்மியர், கும்பாபிஷேகம் செய்பவரும் நித்திய பூசை செய்பவரும் பிராமணர், மேளம் அடிப்பவர் ஓச்சர் இதில் ஏதாவது நம்மவர்களுக்கு உண்டா? விரிக்கில் பெருகும். அபிமானிகள் தற்காலத்துக் கேற்றவிதமாய் இங்கிலீஷ் பாடசாலைகளை ஏற்படுத்தும்படி செய்து கல்விக்கு வேண்டிய காரியங்களை செய்து வந்தநின் பலனாக சிலர்படித்து நன்மையடைந்தும், அதனை முற்றிலும்

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

மறந்து அதற்கு எதிரிடையாக செய்துவருவது எவ்வளவு கேவலமான காரியமென்பது தெளிவாயிருக்கிறது. ஆனால் கோவில் விஷயமென்பது புண்யமென்றும், மோக்ஷலோக வழியென்றும் கூறுவாருளர். அதை மறுக்கவில்லை. கல்லாதவர் நெஞ்சில் நில்லான் சிவனென்பதை கவனித்தால் விவாம் தென்படும். சகலத்துக்கும் மூலகாரணமென்பது கல்வியாதலால் மூதாட்டியாகிய ஔவை பெருமாட்டியாரும் வித்தை விரும்பு என்றார். பொய்யா மொழியாரும் - மனிதர்களுக்கு கண் கல்வி யென்றார்: கல்விக் கடலாகிய நாட்டாழ்வார்களும் ஏகமுதற் கல்விமுளைத்து என்றார். அறிவைவிளக்கி முத்தியில் சேர்க்கும் தன்மையால், தானமெவ்வகையுளுந் தக்கவித்யா தானமே சிறந்ததென்று சூதசங்கிதையில் கூறியுள்ளார். பஞ்ச தந்திரத்தில் கல்வியும் குலத்தைக்காக்கும் கருத்துமே மனிதனைப்பிறந்தவர்களுக்கு வேண்டுமென்கிறார். தக்கதின்னது தகாதது இன்னதென் றுக்கவோர்ந்திலராயினுயிர் மக்களும் விலங்கே; என்று இதிகாசமாகிய இராமாயணத்தில் விளக்கியிருக்கிறது. ஆனால் தருமமென்பது மனிசர்களை மனிதர்களாகச் செய்வதே மேலான தருமம், ஆகையால் உலவாக்கிழியாகிய மகமையால் பாதியை தேவாலய விஷயங்களுக்கும், பாதியை வித்யாலயங்களுக்கும். செலவுசெய்து வருவோமானல் பத்துவருடங்களுக்குள் எவ்வளவு தூரம் முன்வருவோ மென்பது நன்றாய்த் தெரியும். கனம் சி. சங்கரநாயர் அவர்கள், உயர்தரப் படிப்புக்கு கொடுக்கும் பணம் வீண்செலவென்று நினைக்க வேண்டாம். படிக்காவிட்டால் தண்ணீர் இறைக்கிறவர்களாயும், விறகு வெட்டிகளாயும் இருப்பீர்களென்று சொல்லியதை ஆலோசியுங்கள். பத்துவருடம் விடாமுயற்சியாக கல்வியில் நோக்கங் கொள்வோமானால் நாம் எல்லாரினும் மேன்மையடைவோ மென்பது சரதம்.

K. M. A. V.

---

## மதுரைச்செய்தி.

சிதம்பர மகமை:—சிதம்பரமகமை விஷயமாய் இருமுறை நம் மித்திரன் வாயிலாய் விபரமாகத்தெரிவித்துள்ளோம். உலகமுற்போக்கையும் நம் ஜனசமூக குறைகளும் தெரிந்தவர்களே யிம்மகமைப் பண்டின் நிர்வாக மெம்பர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். பலதடவை எச்சரிக்கை செய்தும் கவனியாமல் மவுனம் சாதிக்கும் காரணம் தெரிகிலோம். சற்றே வருஷங்களுக்குமுன் சிதம்பர மகமை நாடார் மகாஜனங்களை மஹிமைபடுத்திக் கொண்டி...தென்பதை எவரும் அறிவார்கள். அதின் பண்டுப்பணத்தைச் சிர்திருத்தம் செய்து அதைக்கொண்டு நம்ஜன சமூகத்தின் குறைகளையும் நிவிர்த்திசெய்து கொள்ளும் விஷயத்தில் ஏன் அசட்டையாக இருக்க வேண்டும்? பொதுஜன க்ஷேமங்களைக் கருதி தன் சொந்த ஜவேஜை வாரிக்கொடுக்கும் இக்காலத்தில் நமது ஜனசமூகத்தின் நன்மைக்காக நம்மவர்களிடமிருந்து வசூல்செய்த பொதுப்பணத்தைத் தங்கள்சொந்தப் பிரயோஜனத்தின் பொருட்டு உபயோகிக்கப்பட்டு வருவதால் அதனிமித்தம் நம் ஜனசமூக முன்னேற்றம் சில வழிகளில் தடைப்பட்டுக் கொண்டிருப்பதற்கு ஜவாப்தாரியார்? என்றுநாம் கேட்கிறோம். இவ்வுலகில் மனித நியாயம் பற்பல விருப்பினும், தெய்வ நியாயம் ஒன்று இருப்பதைச் சகலரும் அறிந்து நடப்பார்களாக! உலக ஜனங்கள் நிமிஷத்துக் கோர்விதம் நூதனமுறையில் நவீன நாகரீகத்துடன் பந்தயம்போட முன்னேற்றமடைந்து வருவதைத் தெரிந்து கொண்டும், நாம் இன்னும் கும்பகர்னனைப் கூடிப்பழகாமலும் வாழ்நாளையின் நாளாக்காமலும் தர்ம மகமைப்பண்டை ஒழுங்குப்படுத்தி ஒன்றுசேர்த்து, நம் ஜாதி முன்னேற்றத்தின் பொருட்டு கல்வி, கைத்தொழில் முதலிய எவ்வித வழியிலாவது உபயோகப்படுத்தி நம் நாடார் ஜனசமூகம் உன்னத நிலமையைக் கூடிய சீக்கிரம் அடைவதற்கு, ஏன் தடையாக நிற்கவேண்டும்.

நாடார்களின் கீழப்பேட்டை:—விருதுபட்டி அருப்புக்கோட்டை பாலையம்பட்டி, இந்த மூன்று ஊர்களிலுள்ள நாடார்களுக்குப் பொதுவானப் பேட்டையானது சில வருஷங்களுக்கு முன் ரிப்பேர்செய்ய ஆரம்பித்து வேலை நடத்தப்பட்டு வந்தது. அதுசமயம் எவ்வித காரணத்தாலோ ஏற்பட்ட மனஸ்தாபத்தால் ஒற்றுமைக்குறைவு ஏற்பட்டு ரிப்பேர்முதலானது நடைபெறாமல் தடைப்பட்டது அதுமுதல் இன்றுவரை மருபடி வேலை ஆரம்பிக்காமல். வைத்தது வைத்தபடியே இருக்கிறது. இதிலிருந்து பேட்டையின் சகல இடங்களையும் அநேக ஜனங்கள் தங்கள் சொந்த கிட்டங்கியென நினைத்து அவரவர்கள் வியாபாரங்களையும் மூட்டைகளையும் கொண்டுபோய் அடுக்குகிறார்கள். சிலர் தங்கள் மாடுகளையும் ஆடுகளையும் கொண்டுபோய்க் கட்டுகிறார்கள். ஐயோ! அனியாயம்!! பொதுப்பேட்டையில் இப்படி செய்யலாமா என்று கேட்க ஒரு ஆளில்லாமல் தாயற்ற சேயைப் போலதத்தளித்துக் கொண்டிருக்கிறது. மூன்றாருரைமுறைக் கனவா





Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

ங்களே! கொஞ்சம்கவனியுங்கள்!! நம்பேட்டை சீர்கேடாகவிருப்ப[து] நம்ஜாதி சீர்கேடாக இருப்பதுபோல எடுத்துக் காண்பிக்கும். கேள் பில்லாமல் கிட்டங்கியாக உபயோகிக்கும் வழக்கத்தை உடனே நீ எப்பாடு செய்து, ரிப்பேர் வேலை ஆரம்பித்து சீர்திருத்தும் செ வேண்டும். ஜீர்ண இருக்கிற ஊரல்கள் அடுத்த வளவிலிருந்து வாக்க நம் ஜனங்கள் இருப்பதற்கும் ஜாகையாக உபயோகப்படுத்துவதற் இடம் போதுமானதாக இருக்கும். தற்சமயம் அடுத்த வளா விருந்து இவ்விடத்தில் மேல்வகுப்பு வாசிப்பதற்காக வரும் நம் மா வர்கள் இருப்பிடம் ஜாகைக்குதவிய வசதிகளுக்காக ஹாஸ்டல் இ ஆகில்நமக்கு முக்கியம் தேவையென்பது சகலராலும் ஒப்புக்கொள்ள கூடிய விஷயம், ஆனதால் இவ்விஷயத்தில் சிரமத்தைக் கவனியா கொஞ்சம் பிரயாசையெடுத்த முன்றாமுறைக் கனவான்கள் ஒற்றுமையாக் இருந்து நாடார் ஹாஸ்டல் பண்டு என்று ஒரு தீ ஏற்படுத்தி சகலஜனங்களிடமும் நன்கொடையாக பணம்வசூல்செய் குறைவுக்கு முன்றாமுறைகளும் சவுப்படி பணம்கொடுத்து நாட ஹாஸ்டல்.............என்ற நாமதேயத்துடன் இப்பே இருக்கிற கட்டிடத்தில் காலாபக்கமும் மேல்மாடிகட்டி அறைகளா தடுத்து அடுத்த ஊர்களிலிருந்து மேல்வகுப்பு படிக்கவரும் நட நாடார் மாணவர்களுக்கு ஜாகை இருப்பிடத்துக்கு வாடகை யன் யில் விட்டப்பட வேண்டும். இதின் பண்டுக்கு பணம்கொடுக்க ஒரு சேதும் பின்வாங்க மாட்டார்கள். மதுரையில் தற்சமயம் மீட்டிங் களுக்கும் சகலஜன காண்பரென்ஸ்களுக்கும் இன்றியமையாத சா மாக பிரயோஜனப்பட்டு பிரகாசிக்கக் கொண்டிருக்கிற வீக்டோரிய எட்வர்ட் சபாமண்டபமும் விசேஷமாக நன்கொடை வசூலித் கட்டப்பட்டுள்ள தென்பதை காம் மனதில் நினைத்து ஒரே வருஷ பிரயாசைப் பட்டுவோமானால் அடுத்த வருஷத்திலேயே நமது சொ ஹாஸ்டல் ஒன்றைநாக்கட்டி முடித்து விடலாம். சம்மாவிருந்த டைகளை அடுக்குவதும் ஆடுமாடுகள் அடைவதற்கட்டிடமும் வழக்கத்தை அடியோடொழித்து பேட்டையை அழகுபடுத்தி இருக்கும் செய்து மேல்மாடியில் ஹாஸ்டல் ஏற்படுத்தி நம் ஜா முன்னேற்றத்துக்கு அடிப்படையான முக்கிய கல்விக் கருமத் அபிவிர்த்தி செய்தால் என்றும் அழியாப்புகழைப் பெற்றும் கிப்போம். இது சத்தியம்.

நாடார்குல ஊழியன்.

---



## ஸ்ரீ மீனாக்ஷிதேவியும் நாடார் குலமும்.

சமஸ்த புவனங்களையும் தனது ஆக்ஞாசக்தியால் ஆட்சிபுரிந்து வரும் ஸ்ரீ மதுராம்பிகையின் நோக்குக்கு இலக்காகாதவர் இயாவருமிலர். மீன்தனது முட்டைகளைத் தன்பார்வையால் எங்ஙனம் குஞ்சாகப் பரிணமிக்கச் செய்கின்றதோ அதுபோலவே சர்வ ஜீவராசிகளையும் தமது திருபாகடாக்ஷ வீக்ஷண்ய சக்தியால் இகபரசுகங்களில் நலமுறச் செய்கின்றனள்.

இப் பரதகண்டத்தில் நந் தமிழ்நாட்டில் அவதரித்த ஞானபுருஷர்களும் மகாத்மாக்களும் சித்தர்களும் தெய்வப்புலமையாய்ந்த கீர்த்தி சம்பன்னர்களும் மோக்ஷ சாம்ராஜ்ய பேரின்ப வீட்டைப் பெறுதற்கு வாசஸ்தலமாயிருந்தது இம் மதுரையம் பதியேயாம். மீனாம்பிகை பண்டைய காலந்தொட்டு தம்மக்களாகிய ஒவ்வொரு மக்கினையும் மேன்மையடையமாறு வேந்தராக்கி சிம்மாஸனத்திலே ற்றி அரசாட்சி புரியச்செய்து கண்குளிரப் பார்த்ததே அம்மகா தேவியின் திருவிளையாட்டாக விருந்தன. அதுபோன்று நம் நாடார்குல சிரோன்மணிகளையும் வேந்தர்களாக அமைத்து ஆட்சிபுரியுமாறு செய்தனளென்பது திண்ணம்.

பின்னர் கலியுக மகிமையாலோ கால வித்யாசக்காலோ கற்கால நாகரீகப்பேயின் மாயா சக்தியாலோ கருணைக்கடலாகிய தெய்வங்கள் மறைந்தயலாயின. அஃதாவது செல்லும் காலமெலாம் செழித்திடு மிக்காலம், கல்லாரேனும் செம்பாரேனுங் காண. என்றும்போல் கல்வி லும் பக்தசேவாகத்திலும் மார்க்கத்திலும் நீதியிலும் அக்கினியிலும் அடிபட ருளாக்கிலும் அமர்க்களப்போதும்.

நாடார்குல பாலியர்களே, உங்களின் முன்னோர்கள் பாண்டிய நாட்டில் வேந்தராக ராஜ்ய பரிபாலனம் செய்ததை நீங்கள் சற்று உற்று நோக்குவீர்களாயின் உங்கள் பிற்கால ஜீவிய மனோரதத்தை பண்படுத்தலாகும். நம்மனோர்க்கு பிரத்தியக்ஷ தெய்வமாய் நேருக்கு நேராய் கண்டுகளித்து பரவச புளகாங்கிதமுற்று அம்பிகையின் திருபாகடாக்ஷம் பெற்று வாழ்ந்தவர்களாய் நம் நாடார்குல புனிதோத்தம மாநிலர்கள் இன்றும் சிலாரூபமாக விளங்கும் ஸ்ரீ மீனாக்ஷி யம்

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

பானின் திருவடியை நம்மவர்கள் தெரிசிக்கா வண்ணம் தடுத்த மகாமாயை மறைத்துக் கொண்டபோதும். அந்தவைத மகாசக்தியின் தோற்றமான கீர்த்தியும் செல்வமும் வியாபாரமும் விவசாயமும் முன்னேற்றமாகாவாறு தடுத்தற்குரிய துஷ்டமாயை நீங்குமாறு தேவியைப் பிரார்த்திப்போமாக.

ஜே. ஜகன்மாதா தின்மக்கள் மாட்டு பாரபக்ஷமின்றி ஆதரித்து வரும் சென்றிரு திருமாகோக்குகள் யாங்கு சென்றன. அம்பிகே, அமுதகுன்னோக்குத் தான் பால் என்று வாளாவிருத்தல் வலமாமோ. துஷிடதைப் பேயைகம் நாட்டினின்றும் தூரத்தி விட்டாற்றன் நம் நாடு செழிக்கும். நம்குலம் அபிவிருத்தியாகும். கல்வி, கைத்தொழில், விவசாயம், வியாபாரம் விருத்தியாகு மாதலால் கின்னே மறைத்திருக்கும் துஷிடதைப் பேயை விலக்காதவரையில் தின்மக்களாகிய நாடார் குலோத்தமர்கள் கண்ணிருந்தும் குருட ராயுமிருக்கும் சக்கத்தை நீக்கக்கூடாமையால் நின் பொற்கமல் சேவையை தந்தருள் இனித் காலம் செய்யாமல் வந்தருள்வாயாக.

அ. மு. கோபாலசாமி நாடார்.

## தந்தைதாய்ப்பேண்

எனதன்புள்ள சகோதர சகோதரிகளே!

தெடிய கடல்சூழ்ந்த இந் நிலவுலகத்திலே, அருப்புக்கோட்டை நகரத்திலே தோன்றிய "நாடார்குல மித்திரன்" என்னும் நாமம் பூண்ட பத்திரிகைக்கு எம் நன்றியைச் செலுத்தி "தந்தைதாய்ப்பேண்" என்னும் ஓர் சிறிய வியாசத்தை யெழுத முன்வந்துள்ளேன். மித்திரர்களே! இதில் பிழையுண்டேல் சான்றோர்கள் மனம்பொறுக்குமாறு பன்முறை வந்தனஞ்செய்து வியாசத்தைக் கூறுகிறேன்.

அன்பர்களே! யான் சொல்லுவதைக் கவனியுங்கள்! "தந்தை தாய்ப்பேண்" என்றஇவ்வேதவாக்கியம் "ஆத்திசூடி" என்னும் ஒரு சிறந்த நீதிநூலில், "ஔவையார்" என்னும் மாதுசிரோன்மணியால் கூறப்பட்டுள்ளது. இதன்பொருள், உன்பிதாவையும், மாதாவையும் காப்பாற்று. என திருவாய் மலர்ந்தருளிய அமுதவார்த்தை யாவரும் கடைப்பிடித் தொழுகுவோமாக.



நாம் எப்பொழுதும், மாதா பிதாக்களை, காப்பாற்றக் கடமைப்பட்டுள்ளோ மல்லவா வென்பதை சிந்திக்கிற்றேன்றும். மாதாபிதாக்கள் நம்மை யின்றும், நமக்கு ஆயுள் முதலியன விருத்திக்கும் பொருட்டு, முத்தொழில் நடாத்தி எங்கெங்கும் வியாபித்திருக்கும் இறைவனருளை வேண்டியும், நமக்கு அன்னமுதலிய சவரட்சணைகள் செய்து வளர்த்தும், நம்மை யாவரும் மதிக்கும்படியான "கல்வி" சாஸ்திரங்களை கற்பிக்கச்செய்தும், நமக்காக அனேக கஷ்டங்களை அடைந்து திரவியங்களைத் தேடியும், இன்னும் இதுபோன்ற சகல நன்மைகளைத் தேடிவைத்த "தந்தை தாய்" களைத் தெய்வம்போல பாவித்து அவர்கட்கு அடங்கி வணங்கி நடப்பது நங்கடமையன்றோ?

சகோதர சகோதரிகளே! நம்முடைய தாய்தந்தை நாம் சிறு குழந்தையாயிருந்து ஒன்றும் அறியாத இளம்பருவத்தில் நமக்கு சகல பாக்கியமும் தேடிவைத்த "மாதா பிதா" க்களுக்குத் தள்ளாத காலத்தில் அவர்களுக்கு அன்னவஸ்திரம் முதலிய சவரட்சணைகள் குறைவறக் கொடுத்து போஷித்தல், நங்கடமை என்பதை "தந்தைதாய்ப் பேண்" என்ற ஔவையார் கூறிய வேதவாக்கியத்தால் உணரலாம். இதன்றியும், "மாதாவை பொருகாளு மறக்கவேண்டாம்" என்று உலகநீதியில் கூறுகின்றன. இக் நீதிவாக்கியங்களைத் தள்ளி மாதாவை மறந்தோமானால் நம் மாதாவினுடைய வயிறெரிந்தால் நாம் என்றும் கற்பதவி படைபோம். அதைப்பற்றியன்றோ "மாதா வயிறெரிய வாழ்ர பொருளாளும்" என்று சான்றோர் கூறியிருக்கின்றனர். கண்ணில்லார்க்கு விளக்குள்ளால் பயனென்னே? நிற்க, நண்பர்களே! "தந்தைசொல் மிக்கமந்திரமில்லை" "தாய் சொற்றுறந்தால் வாசகமில்லை" இதன்கருத்து, நமது பிதாவினுடைய சொல்லுக்கு மிகுந்த பிரணவ மந்திரங்களில்லை, நம் தாயினுடைய சொல்லுக்கு மேற்பட்ட வேத வாக்கியங்க ளொத்த மறைகளிலுமில்லை. என கல்விசிற்றிறந்த பெண்பாலான "ஔவையார்" விளம்பிய திருவாக்கை தேவாமிர்தம்போலக் கொண்டு அவ்வழி நடப்போமாயின் இவ்வுலகத்தில் பெருமைபுகழும், மறுமையில் சொர்க்கபோகமும் கிடைக்கும் என்று நம் நாட்டு முதறிவாளர் பலரும் பலவிதமாய் போதித்துள்ளார்.

முற்காலத்தில் தாய் தந்தையரிடம் பக்தியைக்கிருந்த "ஸ்ரீ இராமன்" தன்னுடைய சிறிய தாயாராகிய "கைகேசி" பின்வாங்கிய பரிபா



Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

லனத்தின் பொருட்டு தானும் தன்மனைவியாகிய "ஜானகி அம்மனும்" தன் தம்பியாகிய "ஸ்ரீ லெட்சுமணப் பெருமாளும்" ஆகிய மூவருமாக பதினான்கு வருடம் "வனமேகி" வனத்திற் சஞ்சரித்து தன்னை விரோதித்த சத்துருக்களை ஜெயித்து ஜெபங்கொண்டு பதினான்கு வருடமும் வனத்திற் கழித்து பின் மூவருமாக அயோத்தியில்வந்து 'பரதர்' 'சத்துருக்கர்' முதலிய தம்பிமார்களுடன் ராச்சிய பரிபாலனம் செய்து கொண்டிருந்தார்களென ராமாயண முதலிய நூல்கள் விரிவாக கூறுகின்றமையால் நாம் இங்கு சுருக்கமாய் சொல்லி முடித்தோம்.

இதன்றியும், திருப்புல்வயல் குருபாத தாசருளிய குமரேச சதகத்திலும், பின்வருமாறு கூறுகின்றன. "தந்தைதாய் வாக்கிய பரிபாலனம் செய்தவன் தசரத குமாரன் ராமன்" என்று கவிவலோர் கூறியிருப்பதை கவனித்து நாம் வாழ்நாளளவும் தாய்தந்தைகளைக் காப்பாற்றுவதே புத்திரர் புத்திரிகளுக்கு நல்லொழுக்கம் "மூத்தோர்சொல் வார்த்தை யமுர்தம்" அதாவது கல்வியறிவினில் முதிர்ந்தோர் சொல்லும் வார்த்தையானது தேவாமிர்தம்போல் கொள்ளப்படும் எனப்பொருள், அதலால் கல்வியிற் சிறந்த 'ஔவையார்' விளம்பிய திருவாக்கு "தந்தைதாய்ப்பேண்" என்றது அவ் வேத வாக்கியத்தைக் கடைப்பிடித்து தாய்தந்தைகளைக் காப்பாற்றி அவர்களுக்கு அடங்கி ணங்கி நடப்போமாக

எஸ். கே. கோவிந்தசாமி பிள்ளை.

---

## என் சரிதை

(முன் தொடர்ச்சி.)

---

சோதரர்களே! இச் சரீரமானது உங்களுடைய பார்வைக்கு எவ்வளவோ நாகரீகமாய் தோற்றுகிறதல்லவா? இச்சரீரமானது கெர்ப்பத்தில் கருவியாக உள்ளபோது, மல மூத்திரங்களை ஆகாரமாகக் கொண்டு வளரப்பெற்றது. மல மூத்திரங்களையே தன் வாசஸ்தானமாக ஏற்படுத்தி மானிடரூபம் பெற்று இங்கு தங்கள் முன்னிலையில் வெட்கமின்றி நான் என்ற அட்டகாசத்துடன் பேசுகிறது.



பாழும் நரகத்திலிருந்து என்னை ரக்ஷிக்கவேண்டுமென்று அனவரதமும் ஈசனை ஸ்மரித்து 300 நாளும் ஒரு யுகத்தைப்போன்று பொறுமையுடன்கழித்து வெளியில் வந்தேன். நான் ஒரு சிறியபையில் வாசம் செய்தவனாகையால் ஈசுவர ஸ்மரணையுடன் வெளியில் எட்டிப்பார்த்த எனக்கு ஓர் ஆச்சரியத்தை அளித்தது. இவ்வகண்ட பூமியின் வெளியானதைக்கண்ட க்ஷணமே குவா என்றேன். இவ்வகண்டமாய் தெரிவது என்ன? என்ற கேள்வியேயன்றி வேறன்று. "நான் கெட்டதுமல்லாது தன்குலத்தையும் கெடுக்குமாம். கோடா ரிக்காம்பு" என்ற வாக்கியப்படி என்னுடைய வார்த்தையாகிய "குவா" என்றதற்கு அருத்தம் தெரியாததும் பதிலளியாமலும் நான் உலகப்பற்று அதாவது பூமியின்மீது பற்றுடையவனாக யிருக்கவேண்டுமென்று கெட்ட எண்ணத்துடன் (இது அவளுக்கு நல்லஎண்ணம்) பூமியைக் கிள்ளி என் நெற்றியில் திலர்தமிட்டாள். என் அன்னையின் வயிற்றிலிருக்கும்போது உண்ட மலஜலக்கட்டுகள் நிவிர்த்திக்கு வெளக்கெண்ணையை ஆகாரமாக ஊட்டினாள். என் அன்னை பாலும் கொடுத்து வந்தாள்.

இவைவிற்க நான் பிறந்த ஏழாவதுதினம் வீட்டுவாசல்களைச் சுத்தம்செய்து எனக்குஅநேகவித சாக்கிகள்செய்து எனக்கு "கமலக்கண்ணன்" என்ற நாமமிட்டார்கள். இந்நாமமே உலகத்தாராலும் என்னை அழைக்கப்பட்டு வருகிறது. நான் பூமியில் அவதாரமானவுடன் இந்த உலகத்தைப்பார்த்து அழுவேன். அப்போது என் அன்னை நான் வயிற்றுபசியால் அழுவதாக எண்ணியவளாய், எண்ணெய் கொடுப்பாள், பால் கொடுப்பாள் எண்ணெயையும் சாப்பிடப் பிரிய மில்லாதவனாய் வெளியில் கக்குவேன். அவள் வலுவந்தத்தின் பேரில் திருப்பவும் என்னை செலுத்த முயற்சிப்பாள். இதுவுமோர் கஷ்டகாலந்தான் என்று இம்சை சகியாது ஏற்றுக்கொள்வேன் சில சமயங்களில் பகவானை நோக்கி ஏ! ஈசா! என்னை ஏன் இவ்வித கஷ்டங்களுக் காளாகப் படைக்கவேண்டுமென்று கேட்பேன். என் ஜனனத்தின் ஆதி முதல் அந்தம்வரை நினைப்பேன் ஆச்சரியப்படுவேன் ஒருவித ஆனந்த சிரிப்பு சிரிப்பேன்.

(தொடரும்.)

எஸ் ஆர். அயோத்திராம்.

---

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

# சங்கரர் வெண்பா.

புதல்வரைப் பெறுதல்.

புக்கவிட மெல்லாம் புகழ்பூண்டு வந்தனரே
தக்கவிவே கானந்தர் சங்கரனே—முக்கியமாய்த்
தம்மிற் றம்மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது.

அன்பு.

தீங்கிழைத்த ராவணன்றன் சேனையெலாங் கொன்றுபடை
தாங்கிவா னானையென்றான் சங்கரனே—ஓங்குபுக
ழும்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கெம்புதோல் போர்த்த வுடம்பு.

விருந்தோம்பல்.

பிள்ளை தனையறுத்தும் பேணி யமுதளித்தான்
தள்ளரிய வன்புதொண்டன் சங்கரனே—கள்ளமிலா
செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.

இனியவைகூறல்.

நிந்தை யுரைராச ரிஷியுரைப்ப யின்சொலரிச்
சந்திரன்சொன் ஞன்மகிழ்ந்து சங்கரனே—அந்தமுளா
இன்சொ லினிதீன்றல் காரணமா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

செய்நன்றியறிதல்.

சின்னநன்றி ராமனுக்குச் செய்த வனவேடன்
தன்னைத்தன் தோழனென்றான் சங்கரனே—மன்னு
தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரி வார்.

நடுவுநிலைமை.

ஆக்கன்றைக் கொன்ற வருமகவை யோராசன்
தாக்கவிடை கொடுத்தான் சங்கரனே—நோக்கிற்
சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபால்
கோடாமை சான்றோர் கணி.

க. சு. அருணகிரி நாடார்.



# ஒரு மாணவனின் குறிப்புகள்.

(முன்தொடர்ச்சி.)

அதற்கவர் சொல்லுகிறார், உனக்கென்ன தெரியும். சிறுபிள்ளைத் [...]னமாய் உளறுகிறாய். நான் எத்தனையோ படித்த வைத்தியக்காரர் [...]ள் பார்த்திருக்கிறேன். சோற்றுக்கில்லாமல் திண்டாடுகிறார்கள். [...]ன்னைப்பார், நானென்ன படித்திருக்கிறேன்? இன்றைக்கு லட்சம் [...]வென்றால் வரும், போவென்றால் போகும்" என்றுதன்னைத்தானே [...]ச்சிக்கொண்டார். அதற்குநான், "நீங்கள் சொல்லுவது சரிதான், [...]னாலும் சில சமயங்களில் பெரிய பணக்காரர்களும், படித்திராவிட்[...]ால் வக்கீல்களாலும், மாஜிஸ்திரேட்டுகளாலும், கேவலமாய் மதிக்[...]ப் படுகிறார்களல்லவா?" என்று கேட்டேன். அதற்கவர் மிகுந்த [...]ோபத்துடன், "நீ என்னத்தைக் கண்டுவிட்டாய். வக்கீல்களெல்லாம் [...]ம்முடைய பணத்திற்காக நம்மிடம் கெஞ்சிக் கூத்தாடுகிறார்கள். [...]வேறென்னவென்று நினைக்காய்" என்றுசொல்லி, பின்னும் ஐந்து [...]மிஷ நேரம்வரையும் படித்த வைத்தியகாரரைப் பற்றிப் பிரசங்கஞ் [...]ய்து, சாந்தமாய் என்னிடம் "நான் ஒன்று சொல்லுகிறேன் கேட்[...]டுக்கொள். என்னவென்றால், படிக்கிறேன் படிக்கிறேன் என்றுசொல்லி [...]லத்தைக் கழிக்காதே. இப்பொழுதே வியாபாரத்தில் பழகி[...]னால்தான் ஏகாவது பிரயோஜனமுண்டு. இல்லாவிட்டால் வியாபாரத்[...]திற்கும் பிரயோஜன மில்லாமல் போய்விடுவாய், நான் சொல்லுகி[...]றேன் கேள்." என்று என்மீது மிகுந்த பரிதாபப்பட்டு புத்திசொன்[...]னார். நானும் இக்கல்விச் சிரோன்மணியுடன் பேசுவதில் பிரயோஜன[...]மில்லையென்றுகண்டு, "ஐயா, நீங்கள் என்மீது கவலைப்பட்டுச் சொன்ன [...]புத்திமதிக்காக மிகுந்த வந்தனம்." என்று அவர் சொன்னபடி நடக்[...]கப் போகிறவன்போல தலையை அசைத்துக்கொண்டு சொன்னேன்.

எப்பொழுதும் சிரிக்கும் குணமுள்ள என்தோழன் ராஜகோபாலன் [...]இதையெல்லாம் பார்த்தும் கேட்டுக்கொண்டு, வந்த சிரிப்பை அடக்[...]கிக்கொண்டு தண்ணீரில் மூழ்கினான். தண்ணீருக்குள் போனவுடன் [...]அவனுக்கு சிரிப்பை அடக்கமுடியாமல் போனதால், தண்ணீருக்குள் [...]ளேயே சிரித்துவிட்டான். அதனாலென்ன வாயிற்றென்றால், அடுத்த [...]நிமிஷமே அவன் கையையும் காலையும் உதைத்துக்கொண்டு மேலே [...]வந்து, வாயிலும், நாசியிலும், கண்ணிலுமிருந்து ஜலம்வடிய சிரிக்க [...]ஆரம்பித்தான்.



Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

ம-ா-ா-ஸ்ரீ, கல்விசிரோன்மணி நாடாருக்கு, இச் சிரிப்பெல்லாம் தன்னைப்பார்த்துத் தான் என்பது கொஞ்சமும் தெரியாது. அவர் சற்று நேரத்திற்குமுன் ஏன் மிகுந்த கோபத்துடன் பேசினாரென்பது எனக்கு அப்பொழுது தெரியாது. ஆனால்இன்று விசாரித்ததில் அவர் கோபத்தின் காரணம் தெரியவந்தது. என்னவென்றால் முன் ஒரு கொலைக்கேசில் அவர் குற்றவாளிக்கு விரோதமாக சாக்ஷி சொன்ன பொழுது, குற்றவாளியின் வக்கீலும் மாஜிஸ்திரேட்டும் அவரை வெகு கேலி பண்ணிவிட்டார்களாம். அதனால்தான் நான் வக்கீல், மாஜிஸ்திரேட்டு, என்றவுடன் அவர் அவ்வளவு கோபத்துடன் பேசினர்.

நாங்கள் வந்து வெகு நேரமாய் விட்டபடியால், நானும் சீக்கிரம் ஸ்நாநம் செய்து என் தோழனுடன் எங்கள் விடுதிக்குச் சென்றேன். போகும்பொழுதே முற்கூறிய சம்பாஷணையைப்பற்றி ஆலோசித்து, ம-ா-ா-ஸ்ரீ, கல்விச்சிரோன்மணி நாடாரின் குமாரன் சிரஞ்சீவி செல்வச் சிரோன்மணியைக் கண்டுபேசி, அவனைக் கல்யாணஞ்செய்யாதபடி தடுத்து, இன்னும் படிக்கும்படி ஏற்பாடுசெய்ய நம்மால் கூடுமான பிரயத்தனங்கள் செய்யவேண்டுமென்று தீர்மானித்தோம்.

இத் தீர்மானம் நிறைவேறும்படி, இதை வாசிக்கும் சீமான் சீமாட்டிகளும் தங்களாலான முயற்சிகள் எடுப்பார்களென்று எதிர்பார்க்கிறோம்.

மதுராபுரி. }
1-1-19. }        "Z"

என் நண்பன் மேற் சொல்லியபடியே நாங்கள் எங்களான முயற்சிகள் செய்கிறோம். இதை வாசிப்பவர் அநேகருக்கு எங்கள் செல்வச் சிரோன்மணி தெரியாமலிருக்கலாம். ஆனாலும், ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு குடும்பத்திலும் இதைப்போலொத்த செல்வச் சிரோன்மணிகள் அநேகர் இருக்கிறார்கள். அவர்கள் கல்வியில் தேர்ச்சிபெற்று முன்னுக்கு வரும்படி தாங்கள் பிரயாசை யெடுத்தால் எங்களுக்கு மிகுந்த சந்தோஷமா யிருக்கும்.

ராஜ நாயகம்.

(இன்னும்வரும்)

---



# சங்க விசேஷங்கள்.

## நாடார் மகாஜன சங்கத்தின் பர்மாக் கிளைச்சங்கம்

இந் நாமம்பூண்ட கிளைச் சங்கமானது சென்னையில் இரண்டாவது தடவையாக கூடிய நாடார் மஹாஜன சங்கத்தின் ஜெனரல் மீட்டிங்கிற்கு விஜயம் செய்துவந்த கனம் சாமிவேல் பி. ஏ. அவர்களின் முயற்சியால் ஏற்படுத்தப் பட்டதென்பது யாவரு மறிந்த விஷயமே. உத்தியோகஸ்தர்கள் எந்த மேலான நோக்கத்தைக்கொண்டு சங்கத்தை ஸ்தாபித்தார்களோ, அந்த நோக்கத்திற்கு ஸாதகமாய் வியாபாரிகளின் மனம் செல்லவில்லை. வியாபாரிகளின் மனமெல்லாம் வேறு வழியில் சென்று கொண்டிருந்தன. ஆயினும் சங்கமானது தன்னுடைய வேலையை நடத்திவந்தது. சில இடங்களில் கூட்டங்கள் நடைபெற்றன.

அப்பொழுது சங்கமானது பர்மாவிலுள்ள நாடார் குலத்தவரோவ்வொருவரிடமும் நபர் ஒன்றுக்கு இரண்டுரூபாய் வீதம் வசூலிப்பதென்றும், ஒரு ரூபாயைத் தாய்சங்கத்திற் கனுப்புவதென்றும், மற்றொரு ரூபாயை கிளைச்சங்க மாபீஸ் முதலான செலவுகளுக்கு வைத்துக் கொள்வதென்றும் தீர்மானித்தது. இத் தீர்மான மீட்டிங்கிலேயே சபைத் தலைவர்கள், உத்தியோகஸ்தர்கள், பொக்கிஷதார் கமிட்டி மெம்பர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

தீர்மானப்படி உள்ளூர் வெளியூர்களி லுள்ளவர்களிடம் நபர் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் வீதம் வசூலிக்கப்பட்டது. சில மாதங்கள் சென்றன. சங்கம் நின்றுவிடும் தருவாயில் இருந்தது. இறுதியில் ஒரு மீட்டிங் நடந்தது. பிரபல வியாபாரிகளும், உத்தியோகஸ்தர்களும், விஜயஞ் செய்திருந்தார்கள். சங்கமாபீஸ் கட்டட விஷயமாக நன்கொடை கேழ்க்கப்பட்டது. சிறிதுநேரம் விவாதம் நடந்தது. நன்கொடை ஒருவரும் எழுதவில்லை. முன் வசூலான ரூபாயைப்பற்றி எதுவும் திட்டமாய் அறிவிக்கப் படவில்லை. ஒருவிஷயமும் முடிவுக்கு வராமல் கூட்டம் கலைந்துபோயின.

அவ்வமயம் வியாபாரிகள் தங்களின் மனதை நேரானவழியில் செலுத்தி இருப்பார்களானல் வசூலானதொகைக்கும், சங்கத்திற்கும்

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

இக்கெதிவராது. ஆயினும் அப்பொழுது வருலான ரூபாய் எவ்வளவு யாரிடத்தி லிருக்கிறது. அல்லது தாய் சங்கத்திற் கனுப்பிவிட்டார்களா. கணக்குகள் யாரிடத்தி லிருக்கின்றது. வருடம் நான்கு சென்று விட்டனவே. ஏனிப்படி இச்சங்கம் ஒன்றும் சொல்லாமல் ஒரே மூச்சியில் தூங்குகின்றது. இனி இச்சங்கம் கண்ணைவிழித்துப் பார்ப்பது கஷ்டம். நாடார் மஹாஜன சங்கம்தான் தட்டியெழுப்ப வேண்டும். யெழுப்பி வருலான ரூபாய் எவ்வளவு. யாரிடத்தி லிருக்கின்றது. கணக்குகளெங்கே என்பதைப்பற்றிய விஷயங்களை கேழ்க்கவேண்டும். ஆகவே இவ்விஷயங்களை நாடார் மஹாஜன சங்கத்தார் கவனிப்பார்களென்று நம்புகிறேன்.

எம். எஸ். எம்.
இரங்கூன்.

---

## க்ஷத்திரியகுல கல்விச் சங்கம்.

### திருமங்கலம் நாடார் மஹா ஜனங்களுக்கோர் வேண்டுகோள்.

கனவான்களே!

சென்ற 1914ஆ ஐரோப்பாவில் தடங்கி முடிவடைந்த யுத்தத்தின் பலனாக, உலகமுழுவது முள்ள ஒவ்வொரு தேசமும் ஒவ்வொரு தேசங்களிலுள்ள ஒவ்வொரு ஜாதிகளுக்கும் சுதந்திரம் என்ற உணர்ச்சி உண்டாகி, அதற்காக உடல், பொருள், ஆவி, யென்ற முப்பொருளையும் தியாகஞ்செய்து வருமிக்காலத்தில், நம் நாடார் மஹாஜனங்களும் அதில் பங்குபெறுவதற்காக, நாடார் மஹாஜனசங்கமும் அதை தாங்குவதற்காக, நம் ஜனங்கள் வசிக்கும் ஒவ்வொரு யிடங்களிலும் உறைவின்முறை ஆதரவுகொண்ட கிளைச்சங்கங்களுமே தேவை.

நமது திருமங்கலத்திலும் 1909ஆ த்தில் க்ஷத்திரியகுல கல்வி சங்க மென்ற ஓர் சங்கம் ஏற்பட்டிருக்கிறது. அது தலைசங்கத்திற்கு ஆதரவளிக்க முடியாததற்கும், ஸ்ரீ பத்ரகாளி மாரியம்மன் தேவஸ்தான திருவிழாக்கள் நடைபெறுமலிருப்பதற்கும், பெண்பாடசாலையில் சென்ற இரண்டு வருஷங்களுக்கு முந்தி அட்டண்டன்ஸில் 65- சிறுமிகள்வரை வாசித்து வந்திருக்க தற்சமயம் சுமார் 15-சிறுமிகள்



வாசித்து வருவதற்கும் சென்ற இரண்டு வருஷகாலமாய் ஆண்பெண் பாடசாலை திருவாக ரிப்போர்ட்டுடன் வருஷாந்திரவையவும் நடைபெறுமலிருப்பதற்கும் மேலே சொல்லிய விஷயங்களுக்கு ஆதாரமான மகமை சீர்கேடடைந்திருப்பதற்கும் ஒற்றுமையில்லாததே காரணமென்பது யாவருக்கும் தெரிந்த விஷயமே.

சென்ற 40-வருஷங்களுக்கு முன் மகமை, ஆசார சீர்திருத்தம் என்ற விஷயங்களில் நம் திருமங்கலம் நாடார்களை வழிகாட்டியாய்க் கொண்ட பற்பல ஊர் நாடார்களும் நம் ஜாதி முன்னேற்ற சுதந்திரத்துக்கும் தேவஸ்தானத்துக்கும், வித்தியாசாலைக்கும், மகமை சீருடன் ஒற்றுமைத்து நடத்திய நடவடிக்கைத் தபால்கள் மாதம் சுமார் 20-க்குமேல் நம் சங்கமாபீசுக்குவந்து சேருவதைப்பார்த்த அங்கத்தினர்கள், நமது ஜாதி முன்னேற்றத்துக்கு ஒற்றுமைக்க நமக்காதாவளித்த நம ஜாதி உறைவின்முறை ஒற்றுமைக் குறைவை நீக்கி, புதியமுறையில் மகமை சீர்திருத்தத்துடன் தேவஸ்தானம், வித்தியாசாலை திருவாக சபையாய் திருத்தியமைப்பதற்கு பல தலைவர்களின் சம்மதத்தால் சங்கம் கூட்டத்தில் சீர்திருத்த தீர்மானமும் செய்திருக்கிறது. ஆனதால் இதை வாசிக்கும் திருமங்கலம் ஒவ்வொரு நாடார்களும்.

உள்ளங் கவர்ந்தெழுந் தோங்குஞ் சினங்காத்து
கொள்ளுங் குணமே குணமென்க—வெள்ளந்
தடுத்தலரிதோ தடங்கரை தான் பெயர்த்து
விடுத்த லரிதோ விளம்பு.

என்ற நல்வழியை இன்னமும் மற்ற ஊர் நாடார்களுக்கும் பிரதிவிடாது ஒற்றுமைக்க சங்கம் கொண்ட தீர்மானத்தை நிறைவேற்றியருள்வீர்களென்று திருமங்கலம் நாடார் மஹாஜனங்களையும் தாழ்மையுடன் வேண்டிக்கொள்ளுகிறோம். நாடார் குலாபிமானிகள்.

திருமங்கலம்.

---

## கமுதி வித்தியாபிவிர்த்தி சங்கம்.

ஸ்ரீமான் சான்பகதூர் V. M. விஜயன் அப்துல் ஷிமான் அம்பலம் அவர்களின் கல்வரவு வந்தனோபசாரம்.

இச் சங்கத்தின் அஸ்திபாரமாகிய விதையை 22-12-1915-ல் ஸ்ரீமான் கான்பஹதூர் விஜயன் அப்துல்ரஹிமான் அம்பலம் அவர்கள் 13-4-1920 திங்கள் காலை 10 மணிக்குத் தம் நகராகிய

அபிராமம் நத்தமிருந்து மோட்டாரில் புறப்பட அவர்களின் இனத்
தாரும் சங்காபி மானிகளாகிய முகம்மதிய இந்து பிரபுக்களாகிய 150
கனவான்கள் 36-வண்டிகளில் ஏறி சூழ்ந்திக்குவர இச்சங்க அங்கங்க
ளும், சங்காபிமானிகளுமாகிய திரள்கூட்டம் மேளதாள கீதவாத்திய
பேரிகைகளுடன் அவர்களுக் கெதிர்சென்று கோட்டை மேட்டில் சந்
தித்து ஆரவாரத்துடனும் கரகோஷங்களுடன் மோட்டாரில் Scout
மாணவருடன் பவனிவர பகல் 1-30-மணிக்கு அவர்களுக்காகத் தயா
ரிக்கப் பட்டிருந்த இடத்தில் இறங்கி பகல் போஜன மருந்தியபின்
மாலை 2-30-மணிக்கு ஷை கீதவாத்தியங்களுடன் பூப் பந்தல்கள்
பூமாரி சொரிந்து சங்கம் பார்வையிட்டும் ஷை சங்கத்தாரால் அலங்
கரித்து வைக்கப்பட்டிருந்த விசித்திர கொட்டகையில் அமர்ந்தனர்.
பின் சங்கம் மானேஜரவர்களை அக்கிராசனம் வகிக்கும்படி காரியதரிசி
யவர்கள் பிரரேபிக்க M. K. M. நடேசனவர்கள் ஆமோதிக்க அக்
கிராசனாதிபதியாக ஸ்ரீமான் M. S. M. பொன்னுசாமி நாடாரவர்கள்
அமர்ந்தனர். பின் கடவுள் வணக்கம் Mr. இராஜா. மா. இராமசாமி
பாண்டிய ரவர்களால் பாடப்பட்டும் சபாநாயகரவர்கள் முன்னுரை
யில் ஷை கான்பஹதூர் அவர்கள் வரவேற்புவிஷயமாய் பேசியும் பின்
ஷை ஸ்ரீமான் கான்பஹதூர் விஜயன் அப்துல்ரஹிமான் அம்பலமாகிய
வள்ளலுக்கு சரிகை பூமாலைகள் போடப்பட்டும் நல் வரவு வந்தனோப
சாரப் பத்திரம் சங்க கௌரவ காரியதரிசியாக ஸ்ரீமான் V. P. சங்கா
பாண்டிய நாடாரவர்களால் வாசிக்கப்பட்டது, பின் இச்சங்காபிமானி
யும் அபிராமம் வாசியும் மதுரை அமெரிக்கன் காலேஜ் தமிழ்பண்டிட்
ஸ்ரீமான் A. கார்மேகக் கோனாரவர்களால் ஸ்ரீமான் கான்பஹதூர்
அவர்களின் குணசீலங்களும் வள்ளல் தன்மையும் தேசாபிமானத்
தால் அவர்கள் நடத்திவரும் சங்கங்கள், ஆண் பெண் பாடசாலை
கள் தர்ம வைத்திய சாலைகள் முதலியவற்றின் சிறப்பும் எடுத்து
காண்பிக்கப்பட்டு பேசி முடியவும் பின் ஸ்ரீமான் கான்பகதூர் வி.
அப்துல்ரஹ்மான் அம்பலமாகிய வள்ளல் தமது திருவாய் திறந்து
தாம் எவ்வித புகழ்ச்சிக்கும் பாத்திரால்லவென்றும் தேசத்திற்கு
சனசமூக ஒற்றுமை முன்னேற்றத்திற்கும் தாம் செய்யும்படி கடவு
ள் தம்மேல்வைத்த தமது கடமையைமட்டும் செய்கிறேன் என்று
தாமும் தமது நண்பர்களாகிய அபிராமம் நத்தம் வாசிகளான கன
வான்களும் தங்கள் ஜீவகால பரியந்தம் இச் சங்கத்திற்கு வேண்டி
உதவிபுரிவதாயும் ஷை சங்கத்திற்கு தாம் போஷகராக யிருப்பதாயு
திருவாய் மலர்ந்தருளிய பின் காரியதரிசி ஸ்ரீமான் Y. S. பரமசி



அவர்களால் வந்தனம் அளித்தும் பூமாலைகள் யாவருக்கும் போடப்
பட்டும் சந்தனதாம்பூலாதிகள் கொடுத்து வழங்கியபின் இராஜவாழ்க்
துடன் மீட்டிங்முடிவுபெற்று போட்டோபடம் எடுக்கப்பட்டும் அவர்
கள் சஞ்சாரஞ் செய்யவும் நாட்டின் ஜனசமூக ஒற்றுமையின் முதற்
படியாகிய சங்கங்களை ஆதரிக்கும் தற்கால வள்ளல்களில் முதல்வரா
கிய ஸ்ரீமான் கான்பஹதூர் V. M. விஜயன் அப்துல்ரஹ்மான் அம்ப
லம் அவர்கள் ஜாகைவந்துதங்கி சங்கத்தாரின் முழு அன்பையும்
ஏற்றுக்கொண்டவர்களாக மிகுந்த குதுகுலத்துடன் தமது பரிவாரங்
கள் சகிதம் மாலை 6-மணிக்கு தமது நகருக்கேகினார்கள். ஈசன் என்
றென்றைக்கும் துணைபுரிவாராக. சுபம்!

---

## பாண்டிய குலாபி விருத்தி சங்கம்.

நமது ஜாதி மேன்மை யடைவதற்கு நமக்குள் ஒற்றுமை முக்கிய
மாய் வேண்டும். ஒற்றுமை விருத்தியாவதற்கு சங்கங்கள் அவசியம்
ஆதலின் நம்குலப் பிரபுக்களின் நன்முயற்சியால் "நாடார் மகாஜன
சங்கம்" ஸ்தாபனமாகி அதன் மூலமாய் நாமடைந்திருக்கும் பலன்
கள் அனந்தம் யென்பதை யாவரும் நன்குணர்வீர்கள். அரசாங்கத்
திற்கு உபபலமாய் பற்பலவிடங்களில் கிளைச்சங்கங்கள்கூடி "நாடார்
மகாஜன சங்கத்தைச் சீர்பெறக் காக்கின்றனன்."

ஆனால் பற்பலவிடங்களில் வசிக்கும், சிற்சில நாடார்களுக்கு
"நாடார் மகாஜன சங்க விஷயமும் அதனால நாமடைந்துள்ள பலன்
களும் தெரிவிப்போரில்லாக்குறைவால் தெரியாம லிருக்கிறதுடன்,
கல்வி யறிவிலும் தேர்ச்சியடையாம லிருக்கிறார்கள். அவர்களுக்கு
கல்வியறிவைப் புகட்டி நமது சங்கத்தின் நோக்கத்தை தெரிவித்து
அவர்களை மேன்மைபெறச் செய்வது நமது சங்கத்தின் முக்கியகடமை
அந்த உத்தேசத்துடன் நமது சங்கத்திலிருந்து, சில பிரபுக்களும்,
அபிமானிகளும், பிரசங்கிகளும், வெளியேறி பற்பலவிடங்களில்
ஜாதீய பிரசார வேலைகள் செய்வதாயிருக்கிறோம்.

அவ்விதம் தலை தூரங்களிலிருந்து தங்கள் தங்கள் சிரமங்களைப்
பாராது அபிமானத்துடன் பற்பலவிடங்களில் பிரசாரவேலை செய்யும்
நம்குல அபிமானிகளை நம்மவர்கள் யாவரும் அன்புடன் வரவேற்று,
உபசரித்து, நமது ஜாதி முன்னேற்றத்திற்கான பற்பல விஷயங்களி
லும் உதவி புரியமாறு வேண்டுகிறோம். ஷை பிரசார வேலைகளைச்
செய்யும் அபிமானிகள் தங்கள் விஜயம்செய்யும் இடங்களிலெல்லாம்

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

கல்வி அபிவிருத்தி விஷயமாயும், சங்கத்திற்கு மெம்பர்களைச் சேர்க்
த்தை சங்கத்தின் மூலதனத்தைக் விருத்தி செய்யும்படியான மார்க்
களைக் கேட்டிப்படிக்கும், நம்குலப் பிரபுக்களின் நடைபெறும் "நாடா
குல மித்திரன்" "க்ஷத்திரிய மித்திரன்" முதலிய பேப்பர்களை ஆதரி
க்கும்படிக்கும், அடுக்க வருஷம் நடக்கப்போகும் ஜனக்கணக்கில் நம்
மவர்களை உள்ளபடியே மேன்மையான ஜாதியர்களென்று ரிக்கார்டு
செய்வதற்கான வழிகளைத் தேடும்படிக்கும் வேண்டிய முயற்சிகள்
செய்யுமாறு வேண்டுகிறோம்.

முக்கியமாய் கூடிய சீக்கிரம் அதாவது நாளது நவம்பர் மீ நடை பெறும் சட்டசபை மெம்பர் ஸ்தான எலக்ஷன்களில், அபேக்ஷ கர்களுக்கு முன்வரும் நம்குலப்பிரபுக்களுக்கே நம்மவர்களின் ஓட்டு களையும், ஓட்டு உரிமை பெற்றவர்களை கொடுக்கும்படி வற்புறுத்த வேண்டிக்கொள்ளுகிறோம். அந்த விஷயமாய் நமது சங்கம் ஒற்றுமை பட ஊக்கம் அபிமானத்துடனும் விடாமுயற்சி செய்யவேண்டும்.

தேர்தல் விஷயமாய் பிரசாரவேலை செய்ய வெவ்வேறு கிளைச் சங்கங்களும் முன்வந்து அவ்வவ்வூர்களில் போதுமான பிரசங்கிகள் வாக்கு செய்யுமாறு வேண்டுகிறதுடன், இன்னும் பற்பல விடங்களில் கிளைச் சங் கங்கள் ஸ்தாபிக்கும்படிக்கும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

எமது பாண்டியகுல அபிவிருத்தி சங்கத்தி லிருந்தும் ஜாதியப் பிரசார வேலைகளைச் செய்ய அபிமானிகள் வெளியேறவும், பொருளுதவி பண்டு வருவிக்கவும் நம்மவர்களின் கல்யாணங்களில் மங்களவாழ்த்து செய்யவும், ஏற்பாடு செய்து வருகிறோம். அதற்கு நம்மவர்கள் அபி மானத்துடன் உதவிபுரியுமாறு வேண்டுகிறோம்.

இவ்வருஷம் கூடும் நாடார் மகாஜன சங்கம் கான்பரென்ஸில் காலம் சென்ற நமது பிரசிடெண்டு ஸ்ரீமான், V. பொன்னுசாமி நாடார் அவர்கள் ஸ்தானத்திற்கு வைஸ்பிரசிடெண்டு ஸ்ரீமான், தி. திருசாமி நாடார் அவர்களை நியமனம் செய்து ஒரு வைஸ் பிரசி டெண்டு ஸ்தானத்தில் மாஜிபிரசிடெண்டவர்களின் குமாரர் ஸ்ரீமான் V. P. அருணாசல நாடார் அவர்களை நியமனஞ்செய்து சங்கத்தைக் கவுரவமாய் நடைபெறச்செய்ய பிரயத்தனஞ்செய்யும்படியாய் தாழ்மை யுடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

S. K. ராமசாமி நாடார்,
காரைப்பட்டணம்.



## வருணை நிலையின் வாய்ப்போக்கு.

வருணநிலை:—இம்மகுடம் புனைந்த புஸ்தகம் ஒன்று நமது மித்திரி மாணியாகிய கிலோன் கண்டிஸோர் நம் பார்வைக்கனுப்பப் பெற்றோம். இது சிங்கை ஜனை தாதன் பக்கிரிசாமியர் குருகுலசேகர தனிய முதலியாரால் எழுதியது. இந்நூலில் பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர், இவியர் கம்மாளர் கழுவர் பள்ளர் பறையர் மபட்டர், ஆதியபல மரபினரையும் பற்பலவாறு மனம்கொண்டபடி சரித்து இழிவாகக் கூறியிருக்கின்றார்.

நூலவர்:—என்னுல் சாதியைக் குறிப்பிடும்போது, நாடார் தன்ன தலைவுப் புத்திரியால், நாடார்களைப் பற்றிய நூலாதாரக் கு மாறுன ஆபாசவார்த்தையை நீட்டி, தமிழ்மணமகியாத இல ழிவே அகம்பாவங்கொண்ட அருக்கமிழ்ப் புலவர்கள் எழுதிய ண்டொரு போலிநூற் பாடல்களை ஆதாரங்காட்டி, பலவிதமாக ழுதி பிருக்கின்றார். இவரது பக்திசூலரியம் மெச்சத்தக்கதே. றும், இவர் பொருத்த மில்லாமல் புளுகக் கற்றுக்கொண்டதற்கு ணிக்கவும் இவருக்கு கல்விவேகக்கதைப் போதிக்கவும் சேர்க்கது.

எந்தப் புளுகும் என் சொந்தப் புளுகுக் கிணையில்லை. என்கிறீர் ழுதி பிருக்கும் ஜாதி உற்ற கோக்கில் இவர் யார்? எக்குலத்தவர்? ந்த தேசத்தவர்? குலத்தொழிலியாது? இவர் வம்ஸ பாம்பரை எது? என் ள விளக்கவில்லை, வெகுவாரியவர் கறையாளர் பட்டணச்செட்டி பறவர் இத்து சாதியைத் தழுவி எழுதி யிருப்பதால் (பாம்பரைப் பட்டோ பரம்பரை யாளரோ? என்பது சந்தேகம்.)

அத்தாளில் குருகுலசேகர தனிய முதலியார், என்ற பட்டத் டிக்காட்டி பிருப்பதால், அக்கனம் இவர் கற்குல முதலியாரல்ல பக்க இன்னம். எனினும் இவர் குறிப்பிடப்படாளா முதலியாரா ஒரு ஜாதியை இழிவு கூற முன்வரார். இரு பிறப்பான முதலியார் ளில் ஸல்லா சாதியையும் இழிவு கூற எழுதினார் என்பேன்றனை வப்படி பிருக்கிறது.

அடடா! தைரிய முதலியாரின் கட்டுமரக் கட்டுக் கதையை என் சொல்வது. எழுவாய் பயனிலைமற்று பிலக்கண விலக்கிய செவ்வனே கற்றவ நிலரோன்று மற்றவரைச் சொல்ல முன்



Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

வந்த இவர் அண்டப்புளுகைச் சற்று ஆராய்வோம். அந்நூல் மு வுரையில் நாற்பாற் குலத்தில் மேற்பா லொருவன், கற்றிலனாகிற் கீழ் பவனே என்னு மூதுரையைத் திருவள்ளுவ நாயகர் (நாயனர் எ பதை நாயகர் என்று மாற்றிவிட்டார். இனி நதிவலேனு ரென்று சொல்வார்போலும்) சொல்லியதாக விமரிசையா யெழுதிவிட்டார் இவர் எழுதியபடி அம் மூதுரையைத் திருவள்ளுவ நாயகர் திருவா கென்று ருசுப்படுத்துவாரா? அதிவீரராம பாண்டியன் அருளிச்செய் ஷை மூதுரையை அடியோடு கவிழ்த்தப் பார்க்கும் தைரிய முதலிய ரின் இலக்கண இலக்கிய ஆராய்ச்சி யாவரும் மெச்சத் தகுந்ததே.

"ராஜகுலத்துப் பெண்ணுக்கும் வேளாளனுக்கும் பிறந்தவ சான்றார்" என்று உலகநாத பண்டிதர் கூறியிருப்பதாக ஒரு ஊதாரி பாடலைக் காட்டுகிறார். இந்த வலைவீசுங் கதையை உலகில் இவர் பெ ன்ற முதலியாரான லவணம் பூத்தத் தேகாரம்பியக் கொண்ட பு கணிப் புலவர்களே மெச்சிக்கொள்ள வேண்டும். இலதேல் நமுவகை யும் நாடாரையும் ஒப்பிடுவாரா? இன்னும் இவர் கட்டுக் கதைகளை காட்டி அவைகட்கேற்ற கண்டனஞ்செய்து, நமது பாண்டியகு க்ஷத்திரிய நாடார்களின் உண்மையை அவர் தெளிவாயறியும்படி வருணநிலையின் வாயாப்பு என்ற புஸ்தகத்தைக் கூடிய சீக்கிரம் வெ யிடுவோம். இம்மட்டில் இவரது வருணநிலையின் வாய்ப்போக்கு கேற்ற பதிலை வரைந்து விடுத்தனம்.

பத்திராதிபர்.

---

## விடுகதை வினவிடை.

நமது மித்திரன் 8-வது பத்திரிகையில் கோவை S. P. செட் யார் எழுதிய விடுகதை வினவிற்கு இதுவரை 45-பேர்கள் விடை எழுதி யிருக்கின்றார்கள். இந்த விடுகதை வினவிற்கு ஒரு ரகசிய சொல்வதாக எழுதியிருந்த ரகசியத்தை, நமது மித்திரன் 8-வது ப திரிகை 244-வது பக்கத்தில் "நாடார்குல முன்னேற்றமென்னும் உ சுத்திற்குப் போகாகசியபாதை" என்ற வியாசத்தை இன்னொருமுறை வாசித்துக் கொள்வார்களாக.



கொழும்பு மிஸ்டர் ரத்தின பாண்டியர் எழுதிய 64 எழுத்துள்ள வினவிற்கு சாத்தூர் பா. செ. பாலுத்துரை பாண்டியன் மிமோரியல் லைபிரேரியின் முக்கியஸ்தர்களில் ஒருவரான மிஸ்டர் ச. பெரியசாமி நாடார் சரியான விடைகொடுத் திருக்கின்றார். அதற்குரிய பரிசை தினவியர் அனுப்புவார்.

யானையடி வெண்பா.

ஆறு கறுமுல்லை ஐமுகத்தி லன்புகவே
ஆறு சடைக்கனிவேல் சொக்கர்மகன்—பேருலவை
மீறிவரு சூரனையே வென்றவன்வல் வேகமுறு
ஆறு முகவேல வன்.

---

நமது மித்திரன் 9-வது பத்திரிகையில் 275-வது பக்கத்தில் கண்ட விடுகதை வினவிற்கு சென்னை ஆ. ப. வை. கோதண்டராம பாண்டிய நாடார் விடை எழுதியிருக்கின்றார்.

1 2 3 4 5 6 7 8.

அ ரு ப் பு க் கோ ட் டை.

---

## விசித்ர விடுகதை வினு.

ஒரு கோயிலின் பெயர் இங்கிலீஷில் ஒரு ஜெந்துவின் பெயர் ஒரு ஊரின் பெயர். ஒரு நகையின் பெயர். சித்திரத்தின் பெயர். ஒரு மிருகத்தின் பெயர். ஒருஜாதியின் பெயர். ஒரு விநோதத்தின் பெயர். ஆக இந்த யேழுவிதப் பெயர்களும், பெயரொன்று மூன்று எழுத்துக் கொண்டதாகும். அந்த யேழுவிதப் பெயரை ஒன்றின்பின் ஒன்றாக எழுதி, முதல் எழுத்தையும் மூன்றாவது எழுத்தையும் நீக்கி, மத்தி யில் (நடுவில்) உள்ள எழுத்துக்களை வாசித்துப் பார்த்தால், நமது இந்திய சகோதரரில் எங்கும் புகழ்பெற்ற ஒரு பிரபலஸ்தருடைய பெயரைக்காட்டும். நம் மித்திரன்மூலம் இந்த விடுகதைக்குச் சரியான விடை பகர்வோருக்கு விகட ஞானக்கும்மி என்ற புஸ்தகம் இனாம் கொடுக்கப்படும். சந்தாதாரருடைய விடையை அங்கீகரிக்கப்படும்.

நல்லூர் கண்பன்.

---

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

## விநோத விடுகதை வினா.

10 எழுத்துக்கொண்ட ஓர்ப்பெயர் ஒன்று அதில் (1-2-3) எழுத்துச் சேர்ந்தால் அறிவென்ற பொருளையும் (4-5-10) எழுத்து பொருளையும் (5-7-8-10) பயம் என்றும் (1-6-3) எழுத்து ஓர் மிருகத்தின் பெயரையும் (4-9-10) தோட்டம்என்றும் (8-1-10) ஓர்நோயின் பெயரையும் (8-1-3) துவர்ப்பு என்றும் (4-8-10) கோபம் என்றும் (1-7-8-6-3) அடியார் என்றும் (3-4-1-10) வெறுப்பு என்றும் (6-5-10) கருத்து என்றும் (8-3-6-10) சடமை என்றும் (5-3-6-10) அறம் என்றும் (1-7-8-10) அழகு என்றும் (1-6-10) எல்லாம் என்றும் (4-5-1-10) பிரம்ப என்றும் (6-5-7-8-10) ஓர் மிருகத்தின் பெயரையும் (8-9-10) ஆபரணமென்றும் பொருள்படும் இந்த ஊர்ப்பெயரையும் இதில் எழுதியபடி அந்தந்த எழுத்துகளில் காட்டியிருக்கும் பொருளையும் தெரிவிப்போருக்கு கனம்நமது பத்திராதிபரவர்களால் இயற்றப்பட்டதும் மதியைவிளக்கி மகிழ்ச்சியை தருவதுமான "மகாமாயன்" என்னும் தமிழ்நாவல் ஒன்று பரிசளிக்கப்படும்.

பெரிய கருப்பன்.

---

## நிகழ்கால விஷயங்கள்.

நாடார் மகாஜன சங்கம்:—சமீபத்தில் தூத்துக்குடியில் நடக்கும் 6-வது கான்பரன்சுக்கு ஜஸ்டிஸ் ஸ்ரீமான் சேஷகிரி அய்யரவர்கள் ஜனநாயகத் தலைமைவகிக்க மனமுவந் திருக்கின்றனர். நாடார்குல நன்மணிகாள் உலகத்தை யெல்லாம் நிலைகுலையச் செய்த கொடிய ஜெர்மானியர்களை அடிமேலடி யடித்து வீழ்த்திவிட்ட நமது காருண்ய பிரிட்டிஷ் ஆட்சி செலுத்தும்போதும் பொறாமைகொண்ட ஜாதியார்களில் கல்லாத மாந்தர்கள் நெடுநாளும் நமக்குப் பொல்லாங்குசெய்து வருகின்றார்கள். இதற் கறிகுறியாக முற்பக்கத்தில் எழுதியிருக்கும் வருணநிலை வியாசமே சாக்ஷி. கற்றறி மூடர்களோ மற்றவர்களும் நம்மீது தப்பபிப்பிராயங் கொள்ளும்படி உண்மைக்கு விரோதமான சிலவிஷயங்களை யெழுதி விடுகின்றார்கள். பின்வரும் பேரறிவாளிகளும் முன்னவர் சென்ற வழிகளை நோக்குகிறார்களேயன்றி, காரணத்தைப் பூரணமா யோசிப்பவர் மிகச் சொற்பமா யிருக்கின்றது.



இப்படி நாமெப்போதும் நெருக்கடியான நிலைமையி லிருப்பவர்களா யிருக்கின்றோ மென்பதறிந்தும் இன்னும் முன்ஜாக்ரதையின்றி வந்தால் பின்காப்பவர்களா யிருக்கின்றோம். அந்தோ!! அந்தோ!!! எங்கு பார்க்காலும் அற்பவிஷயங்களுக்கும் சுதிப்பிரதிகூலி நீ சிறியவன், நான்பெரியவன், என்ற அகங்காரப்பேய்க்கூத்து. ஒருகாரியத்தை செய்கிறவனை செய்யவும் விடுவதில்லை. தானும் செய்வதில்லை. செய்ய முயற்சிப்பதுமில்லை. இப்படி நாம் உலகநடை முழுது மறியாமல் வீட்டுக்குள் கோட்டைகட்டி மனோராச்சியம் பண்ணிக்கொண்டு பொன்மலர் போன்றிருக்கால் நன்மணம் வீசுவதெங்ஙனம் ஆகவே அக்கை பழிந்து விடுமுன்னே தூக்கத்தை விட்டெழுந்து பார்க்கவேண்டிய காரியங்களை விரைவிற்பார்ப்பது தவசியமென்பதை நாம் திட்டமாய்ச் சொல்ல வேண்டியதில்லை ஆதலின் இம்முறை தூத்துக்குடியில் கூடும் கான்பரன்ஸுக்கு எல்லோரும் தவறாமல் வருவதுடன் சந்தாப் பாக்கிகளையும் நன்கொடையும் கொண்டு வாருங்கள்.

அருங்குளம்:—இவ்வூர் திருநெல்வேலி ஜில்லா, கோயில்பட்டி தாலுக்கா, சக்கம்மாள்புரம் போஸ்டைச் சார்ந்த ஓர் கிராமம் இங்கு நம்மித்திரன் பிறந்தது முதற் புகுந்து வந்த விசேஷகாரணத்தினாலே அங்கே ஒரு கல்விச்சாலை ஏற்படுத்த வேண்டுமென்று ஆலோசனை செய்து நாளது சித்திரையீ 18உ காலை 10-மணிக்கு பாடசாலைக்கு அஸ்திவாரக்கால் நாட்டியிருப்பதாக அவ்வூர் நாட்டாண்மை மா-ா-ஸ்ரீ ராஜகோபால் நாடாரவர்கள் நமக்கறிவித்திருக்கிறார். மேற்கண்ட கிராமத்தில் நாடார்களுடைய வீடு 47 தானிருக்கிறதாய்த் தெரிகிறது. இப்போது அவர்கள் கட்டப்போகின்ற பாடசாலையானது நிலக்கிரயமுள்பட சுமார் இரண்டாயிரம் (2000) ரூபாய் செலவாகக்கூடும். பள்ளிக்கூடம் ஆரம்பித்தவுடன் அதன் நிருவாகச்செலவு குறைந்த பட்சம் மாதம் (50) ரூபாயாவது வேண்டியதிருக்கும் 47 வீட்டுக்காரர்கள் இப்பெரிய வேலையை ஆரம்பித்து நடத்த முன்வந்திருப்பது பாராட்டத் தக்கது. ஆனாலும் அவர்கள் முயற்சி குன்றுமலென்றும் நடைபெற்று வரவேண்டி பெரியவூர்களிலுள்ள பிரபுக்களும், அபிமானிகளும் வேண்டிய உதவியை செய்வார்களானால் ஒவ்வொரு கிராமங்களிலும் கலாசாலைகள் ஏற்பட்டு நாடார் மகாஜன சங்கத்தின் நோக்கமும் வெகு விரைவாக நிறைவேறி நாடார் ஜனசமூகம் மிக்க உயர்வுபெற்றுவிடும். ஆகையால் அருங்குளம் வாசிகள்மீது பெருங்கருணை வைத்து ஒவ்வோரிடங்களிலுமுள்ள குலாபிமானிகளும் பிரபுக்களும் தத்தம்மாலியன்றளவு உதவிசெய்யும்படி கோருகின்றோம்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

எம்மாலியன்றளவு சுமார் 25-ரூபாவது சேகரித்து அனுப்பச் சித்தமாயிருக்கிறோம். மற்ற நேயர்களும் அதிகமான தொகை கொடுத்துதவி செய்திருப்பதாக நம்மித்திரனுக்குச் செய்தி கிடைக்குமென்று மிக்க ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

நாடார் குலத்தவர்கள் வசிக்கும் ஆயிரக்கணக்கான கிராமங்களிலும் அவசியம் கலாசாலைகள் ஏற்படவேண்டுமானால் மகாஜன சங்கத்தின் பண்டு விர்த்தியாகவேண்டும். சென்ற வருஷம் விருதுபட்டியில் கூடிய கான்பரன்ஸின்போது திரந்த நன்கொடைப் பெட்டியில் பத் ரூபாய்மட்டும் பொத்தென்று விழுந்தது. இவ்வருஷம் அருப்புக்கோட்டையில் கூடி கான்பரன்ஸ் கூடும்போது கூடி பெட்டியைத் திரந்து வைக்கவேண்டும். பக்க பக்தலட்சமாகவேண்டும். உபசாரணைக் கமிட்டிச் சேர்மெனும் தென்னிந்திய நாடார் சமூக வர்த்தக சக்கரவர்த்தியெனப் பெரும்புகழ் பெற்றவருமான ஸ்ரீமான், மா. வே. ஷண்முகவேல் நாடாரவர்கள் திருவுள்ளமிரங்குமானால் அப்படியம்(பத்துலட்சம்) மாகத் தடையில்லை. அம்மகான் இவ்வருஷம் கூடும் கான்பரன்ஸுக்கும் வெகு ஊக்கமாய் கான்பரன்ஸ் மிகச் சிறப்புடன் நடைபெற வேண்டிய சகல காரியாதிகளும் செய்துவருகின்றார்கள். ஏழைக்கிரங்கும் தயாளகுண சம்பன்னரான ஸ்ரீமான் மா-வே. ஷண்முகவேல் நாடாரவர்கள் இம்முறை நன்கொடைப் பெட்டியை நிரப்பிக்க தக்க உபாயத்தையும் கைக்கொண்டு செய்வார்களென்று நம்புகின்றோம்.

புஷ்பவல்லி:—இப்பெயர்கொண்ட கதைப்புஸ்தகம் ஒன்று நம் பார்வைக் கெட்டியது. 28-பக்கம்கொண்ட சிறு புத்தகமேயானாலும் கதையின் சாராம்சம் வெகு நேர்த்தியாயும் படிப்பதற்கு அருமையாயும் இருக்கிறது. அதன் ஆசிரியர் விஷயங்களை சுருங்கச்சொல்லி விளங்கவைத் திருக்கின்றார். அதன் விலை அணா 3. தான். (ராமகிருஷ்ண அய்யர் அண்கோ, உசிலம்பட்டி) என்றவிலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

இரங்கூன்:—இந்த நாடார் மகாஜனசபை இரண்டாவது வருஷ அறிக்கைப் புத்தகமொன்று வரப்பெற்றோம். அதில் தேவாரம் திருவாசகப் பாக்களும் நாடார் குலத்தைப்பற்றிய முன்னுதாரங்களும் நாடார்சமூக முன்னேற்றமான சில விஷயங்களும் மு. துரைசாமி முதலியாரவர்களால் வெகு அற்புதமா யெழுதப்பட் டிருக்கின்றது. அச்சபையின் முக்கிய கருத்தியாதெனில் இரங்கூனைச்சேர்ந்த கம்



பெரும் க்ஷேத்திரத்திலுள்ள சிவசுப்பிரமணியக் கடவுளுக்கு சித்திரா பௌர்ணமியன்று மகேஸ்வர பூசைசெய்து அடியார் குழாங்கட்கு அன்னதானம் செய்வதும் சுதேசத்தினின்று சென்னை மார்க்கமாக அங்கு விஜயம்செய்யும் நாடார்கட்கும் மற்றனைவருக்கும் தங்குதற்கு சத்திரங்கட்டி வித்தியாசாலையும் வாசகசாலையும் உற்பத்திசெய்து நாடார்குல விர்த்தியை நாடவேதேயாம்.

சென்னை சட்டசபை:—புதிய மாகாண சட்டசபையில் மதுரை ஜில்லா பிரதிநிதி ஸ்தான மொன்றிற்கு, பட்டிவீரன்பட்டி, மிஸ்டர் டபு. பு. அ. இரத்தினசாமி நாடாரும் இராமநாதபுரம் ஜில்லா பிரதிநிதி ஸ்தான மொன்றிற்கு, மிஸ்டர், மோ சி. ஆ. சிதம்பர நாடாரும் அபேக்ஷகர்களாக முன்வந் திருக்கின்றனர்.

நன்கொடை வரவு:—நமது மித்திரன் அச்சுக்கூடத்திற்காக, திண்டுக்கல் சனம் மா. மு. சுந்தர நாடார் வரவு ரூ. 5-0-0. வே. மிஞ்சி மிலிய நாடார் வரவு ரூ. 1-0-0. ஏனைய மித்திராபி மானிகளும் இவ் விஷயத்தில் மனம் வைப்பார்களாகில் அடுத்த வருடமுதல் மித்திரன் இருமுறையாக பிரகாசிப்பான்.

பத்திராதிபர்.

# மிஸ்டர் அஸரியா நாடார்.

ஐரோப்பா யுத்தத்தில் பிரிட்டிஷ் தருப்புகளான 105 இங்கிலீஷ் போர்வீரருக்கு தலைமைவாய்ந்து பற்பலப்போர்முனைகளிலும் வெற்றி பெற்று வீரபட்டத்துடன் இந்தியாவணுகிய க்ஷத்திரியகுல பாண்டிய வம்சாதிபதியான நம் மிஸ்டர் அஸரியா நாடாரவர்கள் உருவப்படம் தயாராகி விட்டது விலை அணா 4. கைவச மிருப்பது சொற்ப காபிகள்தான். மித்திராபிமானிகள் ஒவ்வொருவரும் இப்படத்தை வாவழைத்துப்பார்த்து மகிழ்வதவசியம். வி. பி. கிடையாது. நம் மித்திரன் ஆபீசுக்கு முன்பணம் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

## சரித்திரம்.

அஸரியா நாடாரவர்கள் ஜீவிய சரித்திரம் அவர் போர்முனையில் செய்த வீரதீரம் ஒவ்வொரு போர்க்களத்தின் நிலைமைமுதலிய விருத்தாந்த விவரமும், பலவிதப் போர்வீரப் படங்கள் அடங்கியதுமான புஸ்தகம் அச்சிலிருக்கிறது. அதிசீக்கிரம் விற்பனைக்கு வெளிவரும் வேண்டுவோர் முன்னதாக எழுதிக்கொள்வது நலம்.

பத்திராதிபர்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

## கோடைகாலத்திற்கு!!!

என்னதேவையோ அதை தேடிக்கொள்ளவேண்டும்

### சர்வ தேள் விஷ சஞ்சீவி

ரிஜிஸ்டர்டு.

இந்த லங்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷ சஞ்சீவியைக்கைப்பற்றுங்கள் இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டியது ஏன் என்றால் ஓர் மனிதன் இரவில் 12 மணிக்கு நித்திரையில்

1920 வருஷத்திய கியாலண்டர் இனம்.



ரூபாய் 100 இனம்.

விஷந்தீண்டி விட்டால் அம்மனிதன் எவ்வளவோ அவஸ்தைப்பட அநேக மருந்துகளையும் மந்திரங்களையும் உபயோகித்தும் பயன்படாமற் போகிறதல்லவா? அதற்காக இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு இல்லத்திலும் அவசியம் இருக்கவேண்டியது.

விலை 1-பாக்கெட் அணு 0—8—0

விலை 12-பாக்கெட் ரூபா 5—0—0

**வி, எ. எஸ். பாணி,**

நெ. 8, இருளப்பன் தெருவு, மதராஸ்.


நமது மித்திரன்

# போஷகப் பிரபுக்கள்.

பாலக்காடு மாஜி கௌன்சிலர், ஒலவக்கோடு வர்த்தகம். ம-ா-ா-ஸ்ரீ, க. கு. பொன்னப்ப நாடார். வரவு ரூபா 50—0—0

அருப்புக்கோட்டை நாடார் குலாபிமானியும், ஸ்ரீ அமுதலிங்கேஸ்வரர் தேவாலயதருமகர்த்தாவுமான ஸ்ரீமான் மு. மு. முத்துசாமிநாடார் அவர்கள் செல்வப் புதல்வர், மிஸ்டர் மு. மு. முத்துக்குமாரசாமி நாடார் வரவு ரூபா 50—0—0.

சென்னை நீலநூல் வியாபாரம் காட்டாண்மை, ம-ா-ா-ஸ்ரீ, கா. ஆறுமுக நாடார் வரவு ரூபா. 50—0—0.

சென்னை பாண்டியகுல க்ஷத்திரிய நாடார்கள் ஐக்கிய சங்கத்தின் செகிரிடெரியும், பிரபல வர்த்தக மிராசுதாருமான மிஸ்டர், ஆ. ப. வை. கோதண்டராம பாண்டிய நாடார் வரவு ரூபா 50—0—0.

## வைத்திய சாஸ்திரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| மாணிட மர்ம சாஸ்திரம் | ரூபா | 5 | 0 | 0 |
| மனோவசிய சாஸ்திரம் | ரூபா | 3 | 0 | 0 |
| ஷிப்னடிஸம் | ரூபா | 5 | 0 | 0 |
| சிங்க வீரிய மாத்திரை | ரூபா | 3 | 0 | 0 |
| காந்த ரெத்னம் | அணு | 0 | 6 | 0 |
| சாரதா | அணு | 0 | 4 | 0 |
| சந்திரகாந்தி | ரூபா | 1½ | 0 | 0 |
| 50 அரிய ஔஷத முறைகள் | அணு | 0 | 12 | 0 |
| ஷை 5-பாகங்கள் | ரூபா | 2 | 0 | 0 |

சேட்லாக் வேண்டியவர்கள் இனமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

S. சாமிவேல்,

தென்காஞ்சி, இரங்கோன்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

புழு ஈறுகரைதல் இரத்தம் வடிதல் வாய் நாற்றம், வாய்ப்புண் மு
லிய சகல தந்த ரோகங்களை உடனே நீக்கக்கூடிய, இந்த அருமை
யானபற்பொடி, நீண்ட கால ஆராய்ச்சியின்பேரில் பற்களுக்கு நன்மை
செய்யக்கூடிய சகல கடைச்சரக்கு மூலிகைகள், யாவுஞ் சேர்க்கப்பட்
அதனதன் முறைப்படியே பக்குவஞ் செய்து, அதனதன் அளவுப்ப
மிக கவனத்துடன், கல்நார் பஸ்பம் கடைச்சரக்கு மூலிகைகள் யாவு
முறைப்படிசேர்க்கப்பட்டு தயாராகஇருந்து உபயோகித்தயாவருக்கு
மிகுந்த திருப்தியைக் கொடுத்திருக்கிறது. இப்பொடியை ஒரு முறை
உபயோகித்தவர்கள் எவ்வித தந்த ரோகத்திற்கும் அஞ்ச வேண்டுவதி
ல்லை. சகலரும் உபயோகிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன், மிகுந்
குறைந்தவிலைக்கு விற்கப்படுகிறது. வாங்கி உபயோகித்து மற்றவர்க
ளுக்கும் அடைந்த நன்மையைத் தெரிவிக்கக் கோருகிறேன்.

மூன்று மாதத்திற்கு வரக்கூடிய டப்பி 1-க்கு விலை ரூ. 0-6-0

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

ஏஜண்டுகள் தேவை. விலாசம்,

வி அருமை நாயகம் நாடார்,

போட்டோகிராபர்,

மருந்து ஷாப், தூத்துக்குடி.

---

பெரிய கம்பெனி! சகாயவிலை!! நயமானசரக்குகள்!!!

திருப்தி யில்லாத சரக்குகளைத் திரும்பப் பெற்றுக்கொள்வோம்.

எங்களிடம் காசியில் தயாராகும் பட்டு பீதாம்பர சேலைகள் து
ப்பட்டாக்கள் ரவிக்கைகள் தாவணிகள் பஸ்காளுக்கள் முதலிய சகல
பட்டு தினுசுகளும் மிகவும் சகாய விலைக்கு ஏராளமாகத் தயாராக
இருக்கின்றன.

வேண்டியவர்கள் எங்கள் "பட்டு பீதாம்பர கேட்லாக்" வ
வழைத்துப் பார்த்துக் கொள்ளவேண்டியது. உடனே எழுதுங்கள்.

விலாசம்:—

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.

SILK PITAMBER COY.,
BENARES CITY.

---

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

Editor & Publisher S. A. Muthu Nadar "Nadarkula

Tamil Heritage Foundation

தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials

e-Book series

an international NGO initiative to digitize old Tamil books and palm leaf manuscripts

visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org